பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 12 வியாழக்கிழமை 26.05.2022 கதிர் 202

### இது ரகசியம் அல்ல!

நாட்டின் தலையெழுத்து - விதி - விபரீதமானது. சிந்தனைக்கு பல விடயங்களைத் தருகிறது.

பிரதமர் ரணிலின் முன்னைய நல்லாட்சி அரசின் ஆரம்ப காலத்தில் பிணை முறி ஊழல் மோசடி சர்ச்சை வந்தது. 2

# மக்கள் வங்கியில் 10 பேர் 5,400 கோடி ரூபா ஏப்பம்

## ஒருவர் பிரதமர் ரணிலின் சகாவாம் சாணக்கியன் சரமாரிக் குற்றச்சாட்டு




(மட்டக்களப்பிலிருந்து க.கிருபாகரன்)

கடந்த ஐந்து வருடங்களில் மக்கள் வங்கியில் ஐயாயிரத்து நானூறு கோடி ரூபா பணத்தைக் கடனாகப் பெற்ற பெரும் பணம் படைத்த வர்த்தகர்கள் பத்துப் பேர் கடனை மீளச் செலுத்தவில்லை.

அவர்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சகாவும் முன்னாள் அமைச்சருமான தயா கமகேயும் ஒருவர். அவர் 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையில் ஐந்நூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையைக் கடனாகப் பெற்றுள்ளார்.

- இவ்வாறு அதிரடித் தகவல்களை வெளியிட்டிருக்கின்றார் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன். 2

## கோட்டாவுக்கு எதிராக சூகா ஜெனிவாவில் குற்றப்பத்திரம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூகா 43 பக்க அறிக்கையை ஐக்கிய 12



## ஒரு லட்சத்து ஆறாயிரத்து 420 குடும்பங்களுக்கு யாழ் மாவட்டத்தில் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், மே 26

யாழ் மாவட்டத்தில் ஒரு லட்சத்து ஆறாயிரத்து 420 குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமென அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில்நேற்றுஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

மேலும் தெரிவிக்கையில், வருமானம் குறைந்த மக்களுக்கு தற்பொழுது வழங்கப்படுகின்ற தொகையை 12

## தற்கொலைக் குண்டுதாரிகள் இருவரின் தந்தைக்குப் பிணை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் தற்கொலை குண்டுதாரிகள் இருவரின் தந்தையான பிரபல வர்த்தகர் மொஹம்மட் இப்ராஹீம், கொழும்பு மேல்நீதிமன்றத்தால் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது மகன்கள் கொழும்பு விடுதிகளில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். அதையடுத்து, கைது செய்யப்பட்ட மொஹம்மட் இப்ராஹீம், சுமார் மூன்று வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

## எரிவாயு விலையும் மீண்டும் உயருமாம்

லிட்ரோ நிறுவனம், சமையல் எரிவாயுவின் விலையை மீண்டும் அதிகரிக்க அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளது. இதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் 12

## கைதான இரு எம்.பிக்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில்



கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, மிலன் ஜயதிலக்க உள்ளிட்ட 6 சந்தேகநபர்களை ஜூன் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் 12

## அரசிலிருந்து விலகிய பத்துக் கட்சிகளும் தனியாகப் புதுக் கூட்டணி அமைக்க முடிவு

### விமல் வீரவன்ஸ அறிவிப்பு



கொழும்பு, மே 26

அரசாங்கத்திலிருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 10 பிரதான அரசியல் கட்சிகள் கூட்டணியாக ஒன்றிணைந்து எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட தீர்மானித்துள்ளன எனத் தேசிய சுதந்திர முன் னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீர வன்ஸ தெரிவித்தார்.

சுயாதீன 10 கட்சிகளின் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் 12

## மஹிந்த கடவுச்சீட்டை இன்னமும் மன்றில் ஒப்படைக்கவில்லையாம்

நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பொலிஸ் உயர் அதிகாரி தேசபந்து தென்னக்கோனும் தங்கள் கடவுச் சீட்டுகளை இன்னமும் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வன்முறை கும்பல் மேற்கொண்ட தாக்குதல் குறித்த விசாரணைகள் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகேயின் முன்னிலையில் இடம்பெற்றவேளை மேலதிக சொலிசிட்டர் ஜெனெரல் அயேசா ஜினசேன 12

## தீவக மீனவருக்கு இந்தியா வழங்கும் 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.26

யாழ். தீவக மீனவர்களின் கோரிக்கைக்கு அமைவாக 15 ஆயிரம்லீற்றர்மண்ணெண்ணை இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று ஊடகங்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர்இத்தகவகைக் கூறினார். இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

யாழ். தீவக மீனவர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக சுமார் 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணை இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அது கொழும்பை வந்தடைந்துள்ளது. 12

## மண்ணெண்ணை விநியோகம் இல்லையேல் இன்று முதல் மீனவர்கள் முற்றுகைப் போர்!

### கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் எச்சரிக்கை அறிவிப்பு




யாழ்ப்பாணம்,மே 26

நாளைக்கு(இன்று) வடக்குக் கரையோரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணெயைப் பெற வசதி ஏற்படுத்த வேண்டும்.அது வரத் தவறினால் மீனவர் சங்கங்கள் போராட்டத்தை ஆரம்பிக்கும். ஆரம்பித்தால் அதனை அடக்க முடியாதென யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனச் செயலாளர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார். 12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அப்போதைய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன. பொதுமக்களின் எதிர்ப்புணர்வு கிளர்ந்தமையால் உடனடியாக மத்திய வங்கியை நிதி அமைச்சரிடம் இருந்து பிரித்து எடுத்து, தனக்குக் கீழ் வைத்துக் கொண்டார் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க.

அது மொட்டுக் கட்சி புதிதாக உருவாக வித்தூன்றப்பட்ட காலகட்டம். இன்றைய மொட்டுக் கட்சியினர் எல்லோரும் சு.கவில் இருந்தனர். அவர்களும் விமல் வீரவன்ஸ போன்றோரும் வரிந்து கட்டிக் கொண்டு அப்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவிடன் போனார்கள்.

'பிணைமுறி ஊழல் மோசடியின் கூட்டுக் களவாணிகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவர், ஆகவே மத்திய வங்கி அவரின் கீழ் இருப்பது இன்னும் ஆபத்து, கூட்டுக் களவாணிகள் எல்லோரும் கூண்டோடு தப்பி விடுவார்கள்' – என்று முறையிட்டனர்.

அதனால் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியவரானார். ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு அதிகம் உள்ளாகாத மங்கள சமரவீரவை நிதி அமைச்சராக்கி அவரின் கீழ் மத்திய வங்கியைக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியை பிணைமுறி மோசடி மூலம் சூறையாடிய கூட்டுக் களவாணிகளில் பிரதானமானவர் என தாங்கள் குற்றம் சுமத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமேயே அவர்கள் எல்லோரும் சேர்ந்து மத்திய வங்கியையும் உள்ளடக்கிய நிதியமைச்சையே அப்படியே தூக்கிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இப்போது மொட்டுக்கட்சியினருக்கு. அதைப் பார்த்துக் கொண்டு வாயை மூடி, மௌனம் காக்க வேண்டிய இக்கட்டு விமல்வீரவன்ஸ, வாசுதேவநாணயக்கார போன்ற தென்னிலங்கையின் 'பயர் பிராண்ட்' அரசியல்வாதிகளுக்கு. இதுதான் விதியின் விநோத – விபரீத – விளையாட்டு என்பதா?

நிதியமைச்சர் பொறுப்பேற்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஆறு வாரங்களுக்குள் புதிய வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்கிறார். அந்தப் புதிய வரவு – செலவு திட்டம் அபிவிருத்தியை உள்ளடக்கியதாக இருக்காது, மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டமாக இருக்கும் என்கிறார் அவர். நிச்சயமாக அபிவிருத்தி திட்டங்கள் அவுட். அது தவிர்க்க முடியாத கட்டாயம். ஆனால் உத்தேச வரவு – செலவு திட்டம் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டமாகவும் இருக்காது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் காலில் சரணாகதி அடைந்திருக்கும் ரணில் நிச்சயமாக நாணய நிதியத்தின் வழிகாட்டலில் இருந்து ஓர் அங்குலம் கூட நகராத வரவு – செலவுத் திட்டத்தைத்தான் தருவார், அதுதான் அவருக்குள்ள ஒரே மார்க்கம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அந்த சர்வதேச நாணய நிதியத்தின் வழிப்படுத்தலின்படி, சகல மானிய உதவிகளும் உடன் நிறுத்தப்பட வேண்டும். நாட்டின் வருமானம் உயர்த்தப்பட வேண்டும். ஆகவே புதிய வரவு – செலவு திட்டத்தில் வற் வரி போன்றவை இரண்டு மடங்காக உயரும் வாய்ப்புக் கூட உண்டு.

எனவே வரப்போகும் வரவு – செலவுத் திட்டம் குறித்துப் புதிய நிதி அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க என்ன கயிறு விடும் முன்னறிவிப்புகளை விடுத்தாலும், அவர் சமர்ப்பிக்கப் போகும் அந்த வரவு – செலவுத்திட்டம் நிச்சயமாக மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டமாக அமைய வாய்ப்புகள் மிக மிக குறைவு.

நிவாரணம், மானியம் போன்ற சொற்களுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடப்பாடு விதிகள் தொடர்ந்து இடம் கொடுக்க மாட்டா என்பதுதான் நிஜம்.

★ ★ ★

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருந்த போது அவரது பணியாள் தொகுதிக்குப் பொறுப்பாக இருந்தவர் அவரது மகன் யோஷித ராஜபக்ஷ. காலிமுகத்திடலில் அமைதியான வழியில் போராட்டம் மேற்கொண்டிருந்த மக்களின் மீது மூன்று வாரங்களுக்கு முன்னர் தாக்குதல் நடத்தப்பட்ட நாளுக்கு முதல் நாள் அவர் சிங்கப்பூர் வழியாக வேறு ஏதோ ஒரு நாட்டுக்குப் பயணித்திருந்தார்.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் அவருக்குத்தான் பல விடயங்களும் தெரியும் என்றும், அவர் வாய் திறந்தால் பல உண்மைகள் அம்பலமாகும் – வெளியாகும் – என்றும் பிரபல ஆங்கில வார இதழ் ஒன்று தனது அரசியல் அலசல் பகுதியில் குறிப்பிட்டிருந்தது.

அந்த யோஷித ராஜபக்ஷ அதே சிங்கப்பூர் வழியாக நேற்று தனது மனைவி பிள்ளையுடன் கொழும்பு திரும்பி விட்டார். அவர் வாய் திறப்பாரா, உண்மைகள் அம்பலமாகுமா என்பவை தெரியவில்லை. பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அதற்கிடையில் மேற்படி காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரித்துவரும் கொழும்பு கோட்டை நீதிவான், மேற்படி சம்பவங்கள் தொடர்பாக மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரை நேற்றைய நீதிமன்ற விசாரணையின் போது கேட்டிருந்தார்.

இந்தப் பின்புலத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பெரும்பாலும் இன்று கைது செய்யப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காலிமுகத்திடல் தாக்குதலுக்குப் பின்னர் கொழும்பில் ஒரு பாதையில் தனியாகச் சிக்கிய பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அங்கு கூடிய மக்களால் நையப்புடைக்கப்பட்டிருந்தார். அது பற்றிய வீடியோப் பதிவுகள் கூடத் தாராளமாக சமூக ஊடகங்களில் உலாவின .

நீதிமன்ற உத்தரவின் பேரில் தேசபந்து தென்னகோன் கைது செய்யப்பட்டால், விளக்கமறியலில் கூட அவருக்குத் தனித்துவப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். வெளியில் நடந்த மங்கலம் அவருக்கு சிறைக்குள்ளும் கைதிகள் சேர்ந்து சாத்தி வழங்கி விடலாம். ஆகவே அவர் கைது செய்யப்பட்டால் கூட உயர் பாதுகாப்பு சிறையில்தான் வைக்கப்பட வேண்டியவராக இருப்பார்.

– மின்னல் –

## மக்கள் வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தத்தகவல்களை வெளியிட்டமைக்காக பொதுநிறுவனங்களின் கணக்குகள் தொடர்பான நாடாளுமன்ற (கோப்) குழுவிலிருந்து என்னை நீக்கினாலும் அது தொடர்பில் தாம் கவலை கொள்ளப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பிள்ளையானுக்கும் கொள்கையில்லை, ரணிலுக்கும் கொள்கையில்லை. இருவரும் ஒன்றாகப் பயணிக்க முடியும் எனவும் இதன்போது அவர் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் உள்ள மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நாட்டில் மக்கள் எழுச்சி மூலம் மாற்றம் ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருந்தபோதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் எதிரான மிகப் பெரும் துரோகச் செயலைச் செய்து, பிரதமர் பதவியை ஏற்று, ஜனாதிபதி ராஜபக்ஷவைப் பாதுகாப்பதற்கான முழு முயற்சியையும் முன்னெடுத்துள்ளார்.

புதிதாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னரும் எரிபொருள்கள் உட்பட பல்வேறு பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த விலையேற்றம் தொடர்பாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளார். 180 ரூபாவாகயிருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி 365 ரூபாவுக்கு வந்துள்ளது. பொருளாதாரத்தைச் சரியாக முகாமை செய்யாத காரணத்தினாலேயே இந்த நிலைமையேற்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த பிழையான தீர்மானங்களே நாடு இந்த நிலைக்கு செல்வதற்குக் காரணம்.

எரிபொருள் விலை அதிகரித்ததால் அனைத்துப்பொருள்களின்விலைகளும் அதிகரிக்கும். இன்று மக்கள் இந்தப் பொருளாதார நிலைமைக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக என்ன செய்யவேண்டும் என இலங்கைக்கு உதவும் பல்வேறு அமைப்புகளும் கூறிவிட்டன. ஸ்திரமான அரசியல் சூழ்நிலை ஏற்படுத்தப்படவேண்டும் என்று அவை சுட்டிக்காட்டியுள்ளன. இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியே வருவதாகவிருந்தால் இங்கு அரசியல் ஸ்த்திரத்தன்மை ஏற்படுத்தப்படவேண்டும். அதற்கு மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய ஜனாதிபதி, மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய பிரதமர், மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய நாடாளுமன்றம், மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய அமைச்சரவை ஆகியன அவசியம். அப்படி இருப்பதுதான் அரசியல் ஸ்திரத்தன்மையாகும்.

இன்று சர்வதேசமும் மறைமுகமாகச் சொல்வது கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குச் செல்லவேண்டும் என்பதுதான்.

'கோட்டா கோ ஹோம்' என்ற அலை அனைத்துப் பகுதிளிலும் ஒலிக்கும் நிலையில் ஜனாதிபதி அவரது அதிகாரத்தைக் குறைக்கும் சட்டம் என்ற போர்வையில் 21 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து மக்களை ஏமாற்றும் நாடகத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடாக முன்னெடுத்துள்ளார்.

இந்த நாடு மிக பாரதூரமான நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ள நிலையில், பெரும்பாலானவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில், கடந்த ஐந்த வருடத்தில் மக்கள் வங்கியின் ஊடாக ஆகக் கூடுதலான கடன்களைப் பெற்றவர்கள் இதுவரையில் ஒரு ரூபா கூட திருப்பிச் செலுத்தாதவர்கள் உள்ளனர். இதில் முன்னாள் அமைச்சர் தயா கமகே என்னும்பிரதமர்ரணில்விக்ரமசிங்கவின் கட்சியை சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர். 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் ஐந்நூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையைக் கடனாகப் பெற்றுள்ளார். அதிகமான கடனைப் பெற்று இதுவரையில் ஒரு ரூபா கூட மீள செலுத்தாத முதல் பத்துப் பேரில் ஆறாவது இடத்தில் அவர் உள்ளார்.

இது ராஜபக்ஷ குடும்பத்தின் காசும் அல்ல. தனியாரின் காசும் அல்ல. மக்களின் காசு. இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நான் பேசியமைக்காக இன்று காலை மக்கள் வங்கியின் தலைவரினால் எனக்குக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன்களை மீளப்பெறுவதற்கான சட்ட ஆலோசனை செய்யப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. முந்நூறு கோடி ரூபா பணம் ஒரு தனி நபருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நான்கு வருடத்திற்கு பின்னர் என்ன நடவடிக்கையெடுக்கலாம் என ஆராய்வதாகத் தெரிவிக்கின்றனர். லீசிங் கட்ட முடியாத சாதாரண மக்களின் வாகனங்களைப் பறித்துச் செல்கின்றீர்கள். சிறு வர்த்தகள் கடன்கள் கட்டாவிட்டால் வர்த்தக நிலையத்தினை ஏலத்தில் விடுகின்றீர்கள். தனிநபர் மூவாயிரம் ரூபா இதுவரை கட்டவில்லையென்றதுடன் எனக்குக் கடிதம் அனுப்புகின்றார்கள். ஆனால் அவருக்கில்லை. ஏனென்றால் அவர் ரணிலின் சகா என்பதனாலாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிதாக நிதியமைச்சர் பதவியையேற்றதன் பின்னர் அந்த அமைச்சின் கீழ் வரும் மக்கள் வங்கி ஊடாக முதல் வேலையாக எனக்குக் கடிதம் அனுப்பும் வேலையைதான் செய்துள்ளார்.

இனங்காணப்பட்ட முதல் பத்து பேருக்குக் கடந்த ஐந்த வருடத்தில் 54பில்லியன் ரூபா கடன்கள் மக்கள் வங்கி ஊடாக வழங்கப்பட்டுள்ளன. இது கோப் குழுவினால் பெறப்பட்ட தகவல். இதனை நான் பகிரங்கப்படுத்தியமைக்காக என்னை அதிலிருந்து இடைநிறுத்தினாலும் நான் கவலைப் படப் போவதில்லை.

கடன் அனுமதிக்கும் போது வங்கிகளில் ஏதாவது அடமானம் வைத்தே பணம் வழங்கப்படுகின்றது. ஆனால் இவ்வளவு பெரிய நிதியானது எந்தவித ஆதனமும் இன்றி வழங்கப்பட்டுள்ளது.

இன்று மட்டக்களப்பில் மக்கள் தினமும் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் இன்று வேட்டியை மடித்துக் கட்டுவது குறித்துப் பேசுகின்றனர். ஆரையம்பதியில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று பெற்றோலுக்கும் எரிவாயுவுக்கும் தினமும் கஷ்டப்படுகின்றனர். அதனை வீதிக்குச் சென்று, மக்களின் நிலைமையினைப் பார்த்து, அதனைத் தீர்த்து வைக்க முயற்சி செய்யுங்கள். மேலதிகமாக 2000 எரிவாயு சிலிண்டர்களை மட்டக்களப்புக்குக் கொண்டுவர முடியாத வக்கற்ற தலைவராகவே உங்கள் தலைவர் இருக்கின்றார். வேட்டியை மடித்துக் கட்டத் தேவையில்லை. மக்களுக்கு ஏதாவது செய்யச் சொல்லுங்கள். இல்லாது விட்டால் பதவியை விட்டு விலகி வீட்டுக்குச் செல்லச் சொல்லுங்கள்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகயிருந்தமைக்குப் பதிலாக ரணில் (ராஜபக்ஷ) பிரதமராக தற்போதுள்ளார். பிள்ளையான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவது போன்று ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஆதரவு வழங்கலாம். இதில் புதியதொரு வித்தியாசம் இல்லை. தற்போதும் பஸில் ராஜபக்ஷதான் நாடாளுமன்றத்தை இயக்குகின்றார். பிள்ளையானுக்கும் கொள்கையில்லை. ரணிலுக்கும் கொள்கையில்லை. இருவரும் ஒன்றாக பயணிக்கமுடியும். – என்றார்.






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்த அரசிடம் நீதியா?

நாடு இன்று மிக மோசமான பொருளாதார நெருக்கடியை முகம் கொண்டிருக்கின்றது. சுதந்திர இலங்கையின் எழுபத்தியைந்து வருட சரித்திரத்தில் முன்னர் எப்போதும் சந்தித்திராத இழி நிலைமை இது.

நாட்டில் மாறி மாறி வந்த அரசுகள் இழைத்து வந்த தவறுகளின் தொடர்ச்சியே இது என்றாலும், இப்போது இது இவ்வளவு தீவிர நிலைமைக்கு நாட்டைக் தாக்கியிருப்பது இயல்பான ஒன்றல்ல. இது தன்பாட்டில் நிகழ்ந்த ஒன்றுமல்ல.

பொருளாதார ரீதியில் திட்டமிட்டு, வசமாக முன்னெடுக்கப்பட்ட சூறையாடலின் விளைவே இது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே தனக்கு நெருக்கமானவர்களிடம் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

இந்தச் சந்தேகத்தில்தான் குடும்ப ஆட்சி, ஊழல் நிர்வாகம், நாட்டைச் சூறையாடிய நயவஞ்சகச் செயற்பாடு என்று பல்வேறு பதங்களில் மக்கள் குற்றம் சுமத்தி இப்போது குரல் எழுப்பி, கிளர்ச்சி செய்கின்றார்கள்.

நாடு இத்தகைய மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்குவதற்கான காரணங்களை விசாரித்துக் கண்டறிவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற தகவலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே கோடி காட்டியிருந்தார்.

இதேபோன்ற திட்டம் ஒன்றை பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்ற (கோப்) குழுவும் இப்போது முன்வைத்திருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரம் இத்தகைய மோசமான நிலைமைக்கு வீழ்ச்சியடைவதற்கு அத்துறையில் எடுக்கப்பட்ட எந்தெந்தத் தீர்மானங்கள், முடிவுகள், கொள்கைகள் காரணமாக அமைந்தன, ஏன் அத்தகைய முடிவுகள் எடுக்கப்பட்டன, அத்தகைய முடிவுகளையோ, தீர்மானங்களையோ எடுப்பதற்குக் காரணமான சூழல் அல்லது காரணமானவர்கள் யார் என்பன போன்ற விடயங்களை ஆராய்ந்து, விசாரிப்பதற்கு ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் கூறியிருக்கின்றார். இது தொடர்பில் நாடாளு மன்றத்திடமும் சபாநாயகரிடமும் கோரிக்கை முன் வைக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இதற்கிடையில் மே 9ஆம் திகதியை ஒட்டி நாட்டில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு, பொதுஜன பெரமுன கூட்டணியிலிருந்து பிரிந்து சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று ஜனாதிபதியைச் சந்தித்துக் கோரியிருக்கின்றது.

நல்லது. நாட்டைப் பொருளாதார ரீதியில் வீழ்த்திய விடயங்களைக் கண்டு பிடிக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழு வேண்டும் என்கின்றது ஒரு தரப்பு. வன்முறைச் சம்பவங்களின் பின்னணி, சூத்திரதாரிகளைக் கண்டு பிடிக்க விசேட ஜனாதிபதி ஆணைக்குழு அவசியம் என்கின்றது இன்னொரு தரப்பு.

அப்படியே நடந்து, உண்மைகள் கண்டுபிடிக்கப்படுவதற்கோ, பொறுப்புக் கூறலை நிலை நாட்டச் செய்வதற்கோ இந்த அரசுக்கும், ஆட்சியாளர்களுக்கும் திராணி இருக்கின்றதா என்பதே கேள்வி.

நீதி, நியாயமான – சர்வதேச நியமங்களுக்கு அமைவான – விசாரணைகளை நடத்தவோ, உண்மைகளைக் கண்டறியவோ, பொறுப்புக் கூறலை நிலை நிறுத்தவோ இணங்காத இந்த ஆட்சிப்பீடம் குடும்ப ஆட்சியின் அராஜகங்கள் தொடர்பில் இவற்றை முன்னெடுக்கும் என்று எதிர்பார்ப்பது – நம்புவது – சுத்த முட்டாள் தனம்.

# மோசமான உணவுப் பற்றாக்குறை நாட்டில் ஏற்படும் அபாயம் உள்ளது

## எச்சரிக்கிறார் விவசாயத்துறை அமைச்சர்



நாட்டின் விவசாயத்துறை பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது. பெரும்போக விவசாய செய்கை வீழ்ச்சியடைந்துள்ள பின்னணியில் சிறுபோக விவசாய செய்கையும் வீழ்ச்சியடைந்ததால் மிக மோசமான உணவு பற்றாக்குறையை முழு நாடும் எதிர்கொள்ள நேரிடும்.

வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை தொடர்பாக முழு நாட்டு மக்களும் அவதானம் செலுத்த வேண்டும் என விவசாயத்துறை மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாயத்துறை மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சின் கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

நாட்டில் அரசி தட்டுப்பாடு அல்லது உணவு தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என முன்னாள் விவசாயத் துறை அமைச்சர் மனம் போன போக்கில் குறிப்பிட்டார்.

இந்த வருடம் பாரிய உணவு பற்றாக் குறையை எதிர்கொள்ள நேரிடும் என்பதை சுற்றாடற்துறை அமைச்சராக பதவி வகிக்கையில் குறிப்பிட்டேன்.

உர பிரச்சினையால் விவசாயிகள் எதிர்க் கொண்டுள்ள பாரதூரமான பிரச்சினைகளை விளங்கியும், விவசாயத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு அவதானம் செலுத்தியும் உணவு தட்டுப்பாடு தொடர்பில் விடயங்களை வெளிப்படுத்தினேன்.

உணவு தட்டுப்பாடு சவாலை எதிர் கொள்ளும் நோக்கில் கடந்த அரசாங்கத்தில் சுற்றாடற்துறை அமைச்சராக பதவி வகித்துக் கொண்ட நிலையில் நாட்டில் விவசாயத்துறை பயிர்செய்கையை ஊக்குவிக்கும் திட்டங்களைச் செயற்படுத்தும் யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்தேன்.

சேதன பசளைத் திட்டம் சிறந்ததாயினும் தற்போது அந்தத் திட்டத்தை விவசாயிகள் வெறுக்கும் நிலைமை தோற்றம் பெற்றுள்ளது. இரசாயன உரம், கிருமிநாசினிகள் இல்லாமல் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என நான் குறிப்பிட்ட போது ஒருசிலர் அதற்கு எதிரான கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள்.

சேதனப் பசளை திட்டத்தை செயற்படுத்த ஜனாதிபதி 17 அமைச்சுக்களை உள்ளடக்கிய விசேட குழுவை நியமித்தார். எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைய ஒருசில தரப்பினர் ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் நாட்டின் விவசாயத்துறை பாரிய சவாலை எதிர் கொண்டுள்ளது.

எதிர்வரும் மாதங்களுக்குத் தேவையான அரிசி உட்பட அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு முதன் முறையாக விவசாயத்துறை அமைச்சராக நியமிக்கப் பட்டேன். 4 வருட காலத்துக்குப் பின்னர் மீண்டும் விவசாயத்துறை அமைச்சராக நியமிக் கப்பட்டுள்ளேன்.

2018 ஆம் ஆண்டு பெரும்போக விவசாயத்துறை சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு காரணிகளால் பெரும் போக விவசாயம் முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபடாமல் விவசாயிகள் எரிபொருள் வரிசையில் காத்திருக்கிறார்கள்.

சிறுபோக விவசாயமும் பாதிக்கப்பட்டால் நாடு மிக மோசமான உணவு தட்டுப்பாட்டை எதிர்கொள்ள நேரிடும். விவசாயிகள் எதிர் கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார்.

# மண்ணெண்ணெய் விலையிலும் விரைவில் திருத்தம் வருமாம்!

## அமைச்சர் காஞ்சன கூறுகிறார்



கொழும்பு, மே 26

பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதிக நஷ்டத்தை எதிர்கொள்வது மண்ணெண்யை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வதாலேயே ஆகும்.

எனவேமண்ணெண்ணெய்விலையிலும் திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் ,

மண்ணெண்ணெய் லீற்றரொன்று 87 ரூபாவிற்கே விற்பனை செய்யப்படுகிறது. எனினும் இதற்கான செலவு 362.26 ரூபாவாகும். அதற்கமைய 275.26 ரூபா நஷ்டத்துடனேயே மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது.

மண்ணெண்ணெய் விலையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மீன்பிடித்துறையினரும் , பெருந்தோட்டத் தொழிலாளர்களும் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினரே மண்ணெண்ணெய்யை அதிகளவில் உபயோகிக்கின்றனர். அண்மைக்காலமாக எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அதிகளவானோரால் மண்ணெண்ணெய் உபயோகிக்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் மீனவர்கள் மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட மண்ணெண்ணெய்யை அதிகளவில் உபயோகிப்போருக்கு நிவாரண கொடுப்பனவை வழங்குவதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும்.

எவ்வாறிருப்பினும் குறைந்த விலையில் வழங்கப்படுவதால் அதனை முறைகேடாகப் பயன்படுத்தும் அளவு அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள பலர் டீசல் விலை அதிகரிக்கும் போது மண்ணெண்ணெயை உபயோகிக்கின்றமை தெரியவந்துள்ளது.

எனவே பஸ்களின் புகை பரிசோதனை தொடர்பில் விசேட கண்காணிப்பை முன்னெடுக்குமாறு போக்குவரத்து அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம். – என்றார்.

**இலங்கையில் பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி ஆழமடைந்து வரும் நிலையில், பிராந்திய நாடுகள் இலங்கையில் இருந்து படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றது இக்கட்டுரை. தெற்காசியக் கற்கைகளுக்கான ஐரோப்பிய மன்றத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட விமர்சனத்தின் தமிழாக்கம் இது.**



# சீன அபிவிருத்தி பங்காளித்துவத்தால் கடனில் மூழ்கிப் போன இலங்கை நாடு

இலங்கை மக்கள் தங்களது சுதந்திர வரலாற்றில் மிகவும் சவாலான காலகட்டத்தை கடக்கின்றனர். மேலும் நாட்டின் தொடர்ச்சியான குடும்ப ஆதிக்க அரசாங்கங்கள், நாட்டின் பிரதான உணவு மற்றும் இறக்குமதிக்கு பணம் செலுத்த முடியாததன் விளைவுகளை சுமக்கும் சுமையின் ஒரு நெருக்கடி தருணத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றுள்ளன.

கொடுப்பனவு சமநிலை நெருக்கடி பேரழிவுகரமான கட்டத்தை எட்டியுள்ளது. இதன் காரணமாக அத்தியாவசிய உணவு வகைகள் மற்றும் எரிபொருள் போன்றவற்றைக் கொள்வனவு செய்ய முடியாத நெருக்கடி சாமானியர் மீது முற்றிலும் விழுந்துள்ளது. இதன் விளைவாக அவர்கள் கடுமையான பற்றாக்குறை, செங்குத்தாக அதிகரித்து வரும் விலைகள் மற்றும் அரை நாளுக்கு மேல் நீடிக்கும் தினசரி மின்வெட்டு ஆகியவற்றுடன் தீவிரமாக போராடுவதற்கு விடப்பட்டுள்ளனர்.

இலங்கையில் விரிவடைந்து வரும் பேரழிவின் தீவிரத்தை, அதன் பின்னணியில் பல மனித துன்பங்களையும், சமூக முரண்பாடுகளையும் ஒதுக்கி விட்டு, இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநரான நந்தலால் வீரசிங்கவினால் மே 11 அன்று வரையப்பட்ட யதார்த்த சூழ்நிலை பற்றிய விவரிப்பிலிருந்து அளவிட முடியும்.

இலங்கையின் பொருளாதாரம், அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க விரைந்து புதிய அரசாங்கம் நியமிக்கப்படாவிட்டால் மீட்கவே முடியாத அளவுக்கு சரிவைச் சந்திக்கவேண்டியிருக்கும் என அன்று அவர் எச்சரிக்கும் நிலைமை இருந்தது.

4,000 டொலர்களுக்கு மேல் ஆரோக்கியமான தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தெற்காசியாவிலேயே மிகவும் முன்னேறிய பொருளாதாரம் என்று சமீப காலம் வரை கூறி வந்த ஒரு நாடு, மிக வேகமாக இந்த நிலைக்கு வரலாம் என்பது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இலங்கையிடமிருந்து தேவையான படிப்பினைகளைப் பெறுவதற்கும், அவற்றுக்கு செவிசாய்ப்பதற்கும் தங்கள் சொந்த அரசாங்கங்களை அழைக்குமாறு



பிராந்தியத்தின் பிற பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் உள்ள நிபுணர்களை இந்த நிலைமை தூண்டியுள்ளது.

இலங்கை மீதான EFSAS இன் கடைசி விவரிப்புக்குப் பின்னர், நாடு தழுவிய அமைதியான போராட்டங்கள் அதிகரித்து, ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சிக்கு எதிரான வன்முறைச் சுழலில் நாடு இறங்கியது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டமையால், அவர் கிழக்கு கடற்கரையில் திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தின் பாதுகாப்பிற்கு பாதுகாப்புப் படையினரால் வெளியேற்றப்பட்டார். அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஆனால், அது எட்டு பேர் கொல்லப்படுவதையும் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைவதையும் தடுக்கவில்லை. பல வாரங்களாக நடந்த ஆர்ப்பாட்டங்கள், மே 9 அன்று மஹிந்த ராஜினாமா செய்ததில் இருந்து அரசாங்கத்தை ஆதரிக்கும் மற்றும் எதிர்ப்புத் தெரிவிக்கும் குழுக்களிடையே இரத்தக்களரி மோதல்களாக சிதைந்தன. ராஜபக்ஷ குடும்பத்தினரின் வீடுகள் மற்றும் பல அமைச்சர்கள் மற்றும் தலைவர்களின் வீடுகள் கிளர்ச்சியடைந்த போராட்டக்காரர்களால் எரிக்கப்பட்டன.

நிலைமை மிகவும் பதற்றமாக இருந்தது, இராணுவ வீரர்கள் கவச வாகனங்களில் தெருக்களில் ரோந்து சுற்றினர். வன்முறையைக் கட்டுக்குள் கொண்டு வர வன்முறையாளர்களைக் கண்ட இடத்தில் சுட உத்தரவு வழங்கப்பட்டது.

ஆபத்தான முறையில் கையை விட்டுநழுவும் நிலைக்கு அருகில் இருந்த நிலைமையை மீளக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தின் அழுத்தம், மஹிந்தவின் இளைய சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் செயல்படத் தூண்டியது. மே 9 இரவு நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில், கோட்டாபய தனது பெரும்பாலான நிறைவேற்று அதிகாரங்களை விட்டுக் கொடுத்து விரைவில் ஒரு புதிய அமைச்சரவையை அமைப்பதாக உறுதியளித்ததன் மூலம் நாடு தழுவிய பல வாரங்களாக நடந்த போராட்டங்களுக்கு அடிபணிந்தார். எவ்வாறாயினும், அவர் பதவி விலக வேண்டும் என்ற வளர்ந்து வரும் கோரிக்கையை ஏற்காமல் நிறுத்திக் கொண்டார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை மற்றும் மக்களின் நம்பிக்கையைப் பெறும் பிரதமரை நான் அறிவிப்பேன் என அவர் அறிவித்தார். நாட்டின் தலைமையைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மை பொருளாதார மீட்சிக்கான சாத்தியக்கூறுகளை மழுங்கடிப்பதாக ஆய்வாளர்கள் நீண்ட காலமாக அடிக்கோடிட்டுக் கொண்டிருந்தனர்.

கொழும்பில் உள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து கூறுகையில், எதுவும் நடப்பதற்கு முன்னர் அரசியல் சூழ்நிலைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். உங்களுக்கு நம்பகமான அரசாங்கம் தேவை. தற்போது ஜனாதிபதி பதவி என்பது விஷம் கலந்த பானகம் போன்றதுதான்” – என்றார்.

இந்தப் பின்னணியில், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண புதிய அரசாங்கத்தை அமைப்பது குறித்து மூடிய கதவு விவாதங்களுக்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் 26 ஆவது பிரதமராக மே 10 அன்று கோட்டாபயவினால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். அவரது நியமனத்திற்குப் பிறகு, 73 வயதான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், தேசிய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வந்து, தீவு நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாக உறுதியளித்தார்.

மிகவும் நிம்மதியடைந்த கோட்டாபய, அவர் மற்றும் விக்கிரமசிங்கவின் படத்துடன் டுவீட் செய்துள்ளார். மிகவும் கொந்தளிப்பான நேரத்தில் நமது நாட்டை வழிநடத்தும் சவாலான பணியை மேற்கொள்ள முன் வந்த இலங்கையின் புதிய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள். இலங்கையை மீண்டும் வலிமையாக்க அவருடன் இணைந்து பணியாற்ற நான் எதிர்நோக்குகிறேன் – என்றார் கோட்டாபய. மஹிந்தவும் விக்கிரமசிங்கவை விரைவாக வாழ்த்தினார், அவர் வழிசெலுத்தும்போது அவருக்கு நல்வாழ்த்துக்கள் என்று கூறினார்.இந்த சிக்கலான காலங்கள் என்பதையும் நினைவூட்டினார்.

மஹிந்தவும் குறிப்பிட்ட இக்கட்டான காலங்கள் பல காரணங்களால் பல வருடங்களாக உருவாகிக் கொண்டிருந்தாலும், அதன் வருகையில் ராஜபக்ஷக்கள் ஆற்றிய பங்கைக் குறைத்து மதிப்பிட முடியாது.

வொஷிங்டன் போஸ்ட் மே 11 கட்டுரையில் சுட்டிக் காட்டியபடி,பாதுகாப்புப் படைகள் மீது கட்டுப்பாட்டை செலுத்துவது முதல் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் செல்வாக்கு செலுத்துவது வரையிலான பல்வேறு அரச எந்திரங்களில் ராஜபக்ஷ குலத்தின் கைகள் இருந்தன. இதில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் பற்றிய பரவலான மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் இலங்கை இராணுவத்தின் 2009 உடன் வந்தன. தமிழ் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதல், போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமை, ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுக்கு எதிரான பல ஆண்டுகளாக வன்முறை மற்றும் அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல்கள் மற்றும் நாட்டின் சிறுபான்மையினர் மீது தாக்குதல்களை நடத்திய தீவிரவாத போர்க்குணமிக்க பௌத்த துறவிகளின் கட்டளைகளை மறைமுகமாக வளர்ப்பது உட்பட இன, மத பதற்றங்களை தூண்டுதல் போன்றவையும் இதில் உள்ளடக்கம். அதன் பிறகு பொருளாதாரத்தில் அவர்களின் தவறான நிர்வாகம் இருந்தது. ராஜபக்ஷக்கள் அமைதிக் காலத்திலும் இராணுவத்திற்கான நிதியுதவியை விரிவுபடுத்தினர் மற்றும் குடும்பத்தின் செல்வத்தை வளப்படுத்தக்கூடிய குட்டி முதலாளித்துவத்தின் வடிவத்தில் ஈடுபட்டனர். அவர்களது குடும்பத்தின் சொந்த ஊரான ஹம்பாந்தோட்டையில் உள்ள துறைமுகம் உட்பட – சீனாவின் நிதியுதவியுடன் கூடிய முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களை அவர்கள் விளம்பரப்படுத்தினர்.

புதிய பிரதம மந்திரி விக்கிரமசிங்க இந்தப் பொருளாதார முறைகேடு மற்றும் ஊழலை மாற்றியமைத்து மக்கள் ஆதரவை பெறுவதற்கான பணியை இப்போது எதிர்கொள்கிறார்.

(07ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழின இலக்கிய உலகின் பேராளுமை இறுதிவிடைபெற்றது!

ஈழத்து இலக்கியப் பரப்பின் முதுபெரும் ஆளுமையான ‘தெணியான்’ என்று அறியப்படும் ஓய்வுநிலை ஆசிரியர் கந்தையா நடேசன் அவர்கள் தனது 80 ஆவது அகவையில் மறைந்த செய்தி கலை, இலக்கியப் பரப்பினரிடையேயும், அவரையும், அவரது படைப்புக்களையும் ஆழ நேசித்தவர்களிடையேயும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

தெணியானின் மறைவு தொடர்பிலான அவரது இரங்கலில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

யாழ்.வடமராட்சி, பொலிகண்டிப் பிரதேசத்தின் ‘தெணி’ என்னும் சிற்றூரைப் பூர்வீகமாகவும், வாழ்விடமாகவும் கொண்டிருந்த இவர், 1964 இல் விவேகி என்னும் சிற்றிதழில் வெளியான ‘பிணைப்பு’ சிறுகதை மூலம் தனது எழுத்துலகப் பிரவேசத்தை ஆரம்பிக்கும் போது, ‘தெணி’ என்னும் தன் ஊரின் அடையாளத்தை ‘தெணியான்’ என்னும் தனக்கான அடையாளமாக்கியிருந்தார். ஆனால் ஓரிரு ஆண்டுகளிலேயே அந்த ஊரின் அடையாளமாக தானே மாறி, பின்வந்த நாள்களில் பரந்துவிரிந்த தமிழிலக்கியப் பரப்பின் ஒரு தனித்த அடையாளமாக, தவிர்க்க முடியாத ஆளுமையாக மாறிப்போயிருந்தார்.

அந்தக் கால யாழ்ப்பாணச் சமூகத்தோடு பின்னிப்பிணைந்திருந்த சாதிய ஒடுக்குமுறைக்கும், வர்க்க முரண்பாடுகளுக்கும் எதிரான முற்போக்கு எழுத்தாளர்களாக யாழ்ப்பாணத்திலிருந்தே முகிழ்ப்புப்பெற்ற கே.டானியல், பேராசிரியர்.கா. சிவத்தம்பி, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உள்ளிட்ட முற்போக்கு எழுத்தாளர்கள் வரிசையில், ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் செல்நெறி வெளிப்பாடுகளை மையப்படுத்தி யாழ்ப்பாணச் சமூகத்தின் வெவ்வேறுபட்ட உணர்திறன்களை, வாழ்வியல் போக்குகளை அடையாளம் காட்டுவனவாக அமைந்திருந்த இவரது படைப்புக்கள் பெரும்பாலும் சாதியத்தின் பிடிக்குள்ளான மனித வாழ்வின் அழுத்தங்களாலும், துடிப்புக்களாலும், போராட்டங்களாலும் கட்டமைக்கப்பட்டிருந்தமையே அவை அடித்தட்டு மக்களையும் சென்றடையக் காரணம்.

வெறுமனே ஒரு கலை இலக்கியப் படைப்பாளியாக அல்லாமல், மானிட விடுதலை நோக்கிய சமூக ஒன்றிணைவின் குரலாகவே அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தனது இலக்கியப் பணியை அவர் ஆற்றிச் சென்றிருக்கிறார். இலங்கை அரசின் மதிப்புறு உயர் விருதான சாகித்திய ரத்னா மற்றும் கலாபூஷணம் உள்ளிட்ட பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்ட தெணியான், 150 இற்கும் மேற்பட்ட சிறுகதைகள், 30 இற்கும் அதிகமான கவிதைகள், 8 நாவல்கள், 3 குறுநாவல்கள், 5 வானொலி நாடகங்கள் என்பவற்றோடு நூற்றுக்கணக்கான கட்டுரைகள் மற்றும் விமர்சனங்களைப் படைத்தளித்ததனூடு ஈழத்துக் கலை இலக்கியப் பரப்பில் என்றென்றைக்கும் நீங்கா இடம் பிடித்துள்ளமை, ஒரு படைப்பாளியாக அவரது படைப்புக்களுக்குக் கிட்டியிருக்கின்ற வெகுமதியும், அங்கீகாரமுமே!



இருந்தபோதும், ஈழ இலக்கிய வெளிக்கு அப்பால் தமிழக வாசகர்களையும் தனது படைப்புக்களால் கவர்ந்திழுத்த தெணியானுக்கும், அவரது படைப்புக்களுக்கும் இலங்கையில் சரியான அங்கீகாரம் வழங்கப்படவில்லையோ என்ற ஆதங்கமும் எம் நெஞ்சை நெருடாமலில்லை. ஆனால், தனது முனைவர் பட்டப்படிப்புக்காக கலாநிதி அல்லைப்பிட்டி திருநாவுக்கரசு அவர்களால் ஈழத்து இலக்கிய முன்னோடியான டானியலின் படைப்புக்கள் முழுமையாக ஆய்வுசெய்யப்பட்டதைப் போன்று, இனிவரும் காலங்களில் தெணியானின் படைப்புக்களும் ஆய்வுக்குட்படுத்தப்படுவதன் மூலம், அவரும் அவரது படைப்புக்களும் இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக ஆராதிக்கப்படும் என்ற ஆழ்மன நம்பிக்கையோடு, அன்னாரது ஆத்மா அமைதிபெற பிரார்த்திக்கும் அதேவேளை, இப்பேரிழப்பால் பரிதவித்து நிற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், இலக்கிய உறவுகளுக்கும் என் அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறேன். – என்று தெரிவித்தார்.

# பிரதமர் ரணில் பதவி விலகாவிட்டால் பெரமுனவின் இசைக்கு ஆடவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவிப்பு




தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் அவர் தொடர்ந்து பதவியில் இருந்தால், பொதுஜன பெரமுனவின் இசைக்கு ஏற்ப ஆட வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நீடிக்க விரும்பினால், பொதுஜன பெரமுனவிற்கு பணிந் திருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தை பல கட்சி அரசாங்கம் என்று அழைக்க முடியாது. ஏனெனில் அது பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

புதிய அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இருவரைத் தவிர ஏனையவர்கள் பொதுஜன பெரமுனவின் கீழ் போட்டியிட்டவர்கள்.

திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட 21ஆவது திருத்தம் தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளமையால் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பது சமநிலையில் உள்ளது.

21 ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் ஏற்பாடுகள் எவையும் இல்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மறுபுறம், இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களை நாடாளுமன்றத்திற்கு வரவிடாமல் தடுப்பதும் சமநிலையில் உள்ளது. – என்று அவர் மேலும் கூறினார்.

# கடவுச் சீட்டை நீதிமன்றத்தில் கையளித்தார் நாமல் ராஜபக்ஷ

நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபேகுணவர்தன உள்ளிட்ட ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடவுச்சீட்டை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் கையளித்துள்ளனர்.



அத்துடன், சப்ரகமுவ மாகாண சபையின் தலைவர் காஞ்சன ஜயரத்னவும் தனது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. பி. ரத்நாயக்க, சஞ்சீவ எதிரிமான்ன மற்றும் சம்பத் அத்துகோரல ஆகியோரும் தமது கடவுச் சீட்டை நீதிமன்றில் கையளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 24 பேருக்கு நீதிமன்றம் பயணத்தடை விதித்துள்ளது.

நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு அமைய கடவுச்சீட்டுகள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மற்றும் மிலன் ஜயதிலக்க உள்ளிட்ட 14 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# நீதி அமைச்சரைச் சந்தித்துள்ளனர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸினர்

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது மாற்றுப்பாலினத்தவர் தொடர்பான கரிசனைகள், முஸ்லிம் விவாக, விவகாரத்துச்சட்ட மறுசீரமைப்பு மற்றும் பெருந்தோட்ட மக்களுடன் தொடர்புபட்ட வகையிலான தேர்தல் முறை மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கும் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தச்சந்திப்பு தொடர்பில் ஜீவன் தொண்டமான் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் கூறியிருப்பதாவது –

அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தச்சட்டமூலத்தின் முதலாவது பிரதியைப் பெற்றுக்கொண்டபோது நீதியமைச்சருடன் செயற்திறன்மிக்க கலந்துரையாடலில் ஈடுபட்டோம்.

குறிப்பாக மாற்றுப்பாலினத்தவர்கள் தொடர்பில் காணப்படும் கரிசனைகள், முஸ்லிம் விவாக, விவகாரத்துச்சட்ட மறுசீரமைப்பு மற்றும் பெருந்தோட்ட மக்களுடன் தொடர்புபட்ட வகையிலான தேர்தல் முறை மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நீதியமைச்சருடன் கலந்துரையாடினோம்.

மாற்றுப்பாலினத்தவர்கள் தொடர்பான கரிசனைகளைப் பொறுத்தமட்டில், இது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு இடமளிக்க நீதியமைச்சர் தயாராக இருக்கின்றார்.

எனவே இது தொடர்பில் ஏதேனும் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புபவர்கள் எனக்குக் குறுந்தகவலொன்றை அனுப்பிவையுங்கள். நான் அதனை உரிய இடத்திற்குக் கொண்டு செல்வேன் என்று தெரிவித்துள்ளார்.



# சீன அபிவிருத்தி ......



(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல ஆண்டுகளாக, ராஜபக்ஷக்களின் மகத்தான திட்டங்கள் மற்றும் தவறாகக் கருதப்படும் ஊதாரித்தனம் ஆகியவற்றால் சீனா மிகப்பெரிய பயனாளியாக இருந்து வருகிறது. மேலும் இது மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலத்தில் குறிப்பாக உண்மையாக இருந்தது.

'இந்தியா டுடே'யில் தனது கட்டுரையில் தர்பன் சிங் குறிப்பிட்டுள்ளபடி ,ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் இலங்கையும் சீனாவுடன் நெருக்கமாகச் சென்றது. சீனாவின் அபிவிருத்தி பங்காளித்துவ மாதிரியில் இலங்கை மேலும் மேலும் ஆழமாக மூழ்கிக் கொண்டிருந்தது. ஏற்கனவே பாதிக்கப்படும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஊட்டமளிக்கும் ஒரு கையும் தின்று கொண்டிருந்தது. இது எவ்வாறு வெளிவருகிறது என்பது இங்கேதான் உள்ளது. பல ஆண்டுகளாக வரவு – செலவுத் திட்ட பற்றாக்குறை மற்றும் நாட்டை இயங்க வைக்க தேவையான பொருள்களை இறக்குமதி செய்வதற்கு சீனாவிடம் இருந்து இலங்கை பெருமளவில் கடன் வாங்கியது. ஆனால் அது விலையுயர்ந்த மற்றும் சாத்தியமில்லாத விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, நெடுஞ்சாலை, விருந்தோம்பல் மற்றும் பொது நிதிகளை மேலும் பிழிந்தெடுக்கும் அத்தகைய வசதிகளை உருவாக்குவதற்கு பெரும் தொகையை வீணடித்தது. மேலும் கட்டப்பட்டவற்றில் பெரும்பகுதி பெரும் இழப்பைச் சந்தித்த பிறகும், சீனக் கடன்களுக்குச் சேவை செய்யத் தவறியதாலும் கைவிடப்பட்டது. இலங்கையின் மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்கும் நாடான சீனா மட்டுமே இதில் வெற்றி பெற்றுள்ளது. ஒப்பந்தங்கள் சீன நிறுவனங்களுக்குச் சென்றன மற்றும் சீனா ரியல் எஸ்டேட்டை ஈக்விட்டி வடிவில் பெறுகிறது."

எனவே, பெய்ஜிங்கின் கடன் – பொறி இராஜதந்திரம் மீதான விமர்சனங்களையும் எச்சரிக்கைகளையும் புறக்கணித்து, மூலோபாய ரீதியாக அமைந்துள்ள இந்தியப் பெருங்கடல் தீவு தேசத்தில் பெரிய அளவிலான சீன முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக மஹிந்த சீனாவில் நன்கு விரும்பப்பட்ட இலங்கைத் தலைவர் ஆவார்.

சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் யீ, ஜனவரி மாதம் கொழும்பில் மஹிந்தவை சந்தித்த போது, நீங்கள் சீன மக்களுக்கு பழைய நண்பர். நீங்கள் சீனாவிற்கு ஆறு முறை விஜயம் செய்தீர்கள். இந்த சிறப்பு மிக்க நட்பை நாங்கள் அன்புடன் நடத்துகிறோம், இந்த கதை சீன – இலங்கை உறவுகளின் வரலாற்றில் பதியப்படும்." – என்றார்.

ஆயினும்கூட, சீனாவின் நலன்கள் மற்றும் இயல்பின் உண்மையான பிரதிபலிப்பாக, சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் பெய்ஜிங்கில் மே 11 அன்று ஊடகவியலாளர் சந்திப்பில், மஹிந்த பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதைப் பற்றி கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார். மஹிந்தவின் ராஜினாமா குறித்த கேள்விகளை எழுப்பிய லிஜியன், இலங்கையின் சமீபத்திய முன்னேற்றங்களைநாங்கள்கவனித்துள்ளோம் என்று எளிமையாக கூறினார் .

சீனாவின் அலட்சியம் மஹிந்தவுடன் நிற்கவில்லை அது ஒட்டுமொத்த இலங்கைக்கும் பரவியது. வொஷிங்டனை தளமாகக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தை பிணை எடுப்பதற்காக அணுகும் இலங்கையின் முடிவை கொழும்புக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong அண்மையில் விமர்சித்தார் என இலங்கை ஊடகங்கள் மேற்கோள் காட்டின.

இலங்கையின் தற்போதைய அழிவுகரமான பொருளாதார நெருக்கடிக்கு சீனா கணிசமான மற்றும் நேரடியாகப் பங்களித்த போதிலும் இதிலிருந்து இலங்கை மீளுவதற்கு வழிகாட்டவில்லை. மேலும், சர்வதேச நாணய நிதியத்தை கொழும்பு அணுகுவதைத் தடுக்க முற்படும் அதேவேளையில், சீனா எந்தவொரு மாற்றீட்டையும் முன்வைக்கவோ அல்லது இலங்கையின் மிகக் கடினமான நெருக்கடியை எதிர்கொள்ளத் தானே முனைப்புடன் உதவவோ முன்வரவில்லை. இலங்கைக்கு 2.5 பில்லியன் டொலர் கடன் வசதியை சீனா பரிசீலிப்பதாக பல வாரங்களுக்கு முன்னர் அறிவித்த பின்னர், தூதுவர் Zhenhong உண்மையில் இந்த விடயத்தில் முற்றிலும் மௌனம் சாதித்துள்ளார்.

இலங்கை புதைகுழி தெற்காசியா முழுவதிலும் உள்ள நிபுணர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இது, தாங்கள் மற்றொரு இலங்கையாக மாறுவதைத் தவிர்ப்பதற்கு மற்ற நாடுகள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய விவாதங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் வழிவகுத்தது. பங்களாதேஷில், தெற்காசிய கொள்கை மற்றும் ஆளுகைக்கான நிறுவனம் (SIPG) மற்றும் வடக்கு தெற்கு பல்கலைக்கழகம் (NSU) இணைந்து 'தற்போதைய இலங்கைப் பொருளாதார நெருக்கடி: மற்ற தெற்காசிய நாடுகளுக்கான பாடங்கள்' என்ற தலைப்பில் ஏப்ரல் 24 அன்று வலையரங்கை ஏற்பாடு செய்தன.'

ஜனரஞ்சகக் கொள்கைகள், ஊழல் மற்றும் தவறான நிர்வாகம் ஒரு நாட்டை எதற்கு இட்டுச் செல்லும் என்பதற்கு இலங்கையின் நிதி நெருக்கடி ஒரு சிறந்த உதாரணம் என்று பேச்சாளர்கள் webinar இல் தெரிவித்தனர். இது, நல்லாட்சி இல்லாத, நிர்வாகத்தை அரசியலாக்கிய தெற்காசிய நாடுகளுக்கு ஒரு பாடம் என்று அவர்கள் உணர்த்தினர்.

இலங்கை எப்போதுமே புவிசார் அரசியலின் மையமாக இருந்து வந்தாலும், பாரம்பரியமாக உலகளாவிய மற்றும் பிராந்திய இராஜதந்திரத்தில் நடுநிலையான நிலைப்பாட்டை கடைப்பிடித்து வருகிறது என்று பங்களாதேஷ் முன்னாள் வெளியுறவு செயலாளர் ஷாஹிதுல் ஹக் கருத்து தெரிவித்தார். இருப்பினும், சமீபத்திய தசாப்தங்களில் நாடு ஒரு பக்கம் சாய்ந்துள்ளது, குறிப்பாக சீனாவின் திட்ட நிதியில். உலகளாவிய சக்திகளுடனான உறவை மறுசீரமைப்பதில் ஒருவர் மிகவும் புத்திசாலியாக இருக்க வேண்டும் என்று அவர் எச்சரித்தார் .

இதற்கிடையில், சர்வதேச வணிக வேளாண்மை மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (IUBAT) பொருளாதாரத் துறையின் பேராசிரியரும், ஒருங்கிணைந்த மலை வளர்ச்சிக்கான சர்வதேச மையத்தின் (ICIMOD) முன்னாள் தலைமைப் பொருளாதார நிபுணருமான டாக்டர். கோலம் ரசூல், ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் நற்பண்புகளை எடுத்துரைத்தார். கோட்டாபய அரசாங்கம் விவாதம் மற்றும் ஆலோசனைகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, தனது சகோதரர் மஹிந்தவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அதிகாரத்தை பலப்படுத்தவும் குடும்பத்தின் செல்வாக்கை அதிகரிக்கவும் மட்டுமே முயற்சித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு நாட்டின் கொள்கை முடிவுகள் அதன் அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், பல கட்சி ஜனநாயக அமைப்பு மிகவும் முக்கியமானது என்று டாக்டர் ரசூல் கருத்து தெரிவித்தார். உதாரணமாக, ஒரு சர்வாதிகார நாட்டில், மேல்மட்டத்தில் இருந்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மறுபுறம், ஜனநாயகஅரசமைப்பில், அதிகாரம் பல்வேறு நிலைகளில் ஒதுக்கப்படுகிறது மற்றும் அனைத்து முக்கிய பங்குதாரர்களையும் உள்ளடக்கிய பங்கேற்பு முறையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மேலும் சாத்தியமான அனைத்து விருப்பங்களையும் தாக்கங்களையும் எடைபோடுகின்றன. டாக்டர் ரசூல் இலங்கை சூழ்நிலையில் இருந்து பங்களாதேஷுக்கு மற்ற முக்கியமான படிப்பினைகளை சுட்டிக்காட்டினார். பொருளாதாரமும் அரசியலும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகவும், ஒன்றோடொன்று செல்வாக்கு செலுத்துவனவாகவும் அவர் எழுதினார், மேலும் நோபல் பரிசு பெற்ற மில்டன் ப்ரைட்மேனை மேற்கோள் காட்டி அரசியல் சுதந்திரம் பொருளாதார சுதந்திரத்திற்கு அடிப்படை என்று வலியுறுத்தினார். டாக்டர். ரசூல் வெளிநாட்டுக் கடன்களை அதிகமாகச் சார்ந்திருப்பதற்கு எதிராகவும் எச்சரித்தார். இது நாடுகளை பாதிப்படையச் செய்யும் என்று அவர் கருதுகிறார்.

Md. Maruf Mozumder தனது டெய்லி ஒப்சர்வர் கட்டுரையில் பங்களாதேஷ் இலங்கையிடமிருந்து தீவிரமான படிப்பினைகளைப் பெற வேண்டும் என்று கடமையாகப் பரிந்துரைத்தார். சில சமயங்களில் இந்தியாவை விட சீனாவின் பக்கம் சாய்ந்து கொள்ளும் இலங்கையின் போக்கு பிரச்சினைக்குரியது என்று அவர் பரிந்துரைத்தார்.கடன் பொறி இராஜதந்திரத்தின் காரணமாக, தெற்காசியாவில் வளரும் நாடுகளுக்கு சிறிய கடன்களை வழங்குவதன் மூலம் பெரும் லாபத்துடன் சீனா புவிசார் அரசியல் ரீதியாக வலுவான நிலையை உருவாக்குகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் – என்றார் அவர்.

nepaleconomicforum.org க்கான 'நேபாளத்திற்கான இலங்கை நெருக்கடி மற்றும் கற்றல்' என்ற கட்டுரையில் ஆர்யா ரிஜால், இலங்கை தனது அரசியல் மற்றும் பொருளாதாரப் பாதை தொடர்பான பலவீனமான கணிப்புகளை அடையாளம் காணத் தவறிவிட்டது என்றும், பயனுள்ள விதிமுறைகள் மற்றும் கொள்கைகளை அறிமுகப்படுத்தத் தவறிவிட்டது என்றும் வாதிட்டார். நிலைமையை அதிகரிக்காமல் தணிக்க முடியும். எனவே, நேபாளம் இலங்கையின் நிலைமையிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வதும், பொருளாதாரம் பலவீனமடைவதையும் இறுதியில் வீழ்ச்சியடைவதையும் தடுக்க பொருத்தமான ஒழுங்குமுறைகளைத் தொடங்குவதும் முக்கியமானதாக இருந்தது என்றார்.

இலங்கையில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் குறித்து பாகிஸ்தானின் பரிந்துரைகள் சுவாரஸ்யமாக உள்ளன. பேண்தகு அபிவிருத்திக் கொள்கை நிறுவனத்தின் தலைவரான கலாநிதி அபித் கையூம் சுலேரி, இலங்கையை பாகிஸ்தான் கிளப்பில் வரவேற்று, இந்தப் பிராந்தியத்தில் அரசியல் குழப்பங்களுக்கு உள்ளாகும் ஒரே நாடு பாகிஸ்தான் அல்ல. இலங்கையும் அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. பாதுகாப்பின்மை பாதுகாப்பின்மையை வளர்க்கிறது. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடிக்கு வித்திட்டுள்ளது. பாகிஸ்தானில் நிலவும் அரசியல் நெருக்கடி பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் செல்கிறது – என்று அவர் உணர்ந்தார்.

Aqdas Afzal, Dawn இல் எழுதுகையில், பாகிஸ்தானின் புதிய அரசாங்கம் ஏற்கனவே இலங்கையைப் போன்ற பொருளாதார சவால்களை எதிர்கொள்கிறது என்ற கருத்தை வெளிப்படுத்தினார். சீன உள்கட்டமைப்பு திட்டக் கடனுக்கான வட்டி செலுத்துதல்கள் செங்குத்தான டொலர் கடன்களை உருவாக்கி, இலங்கையின் நெருக்கடிக்கு காரணம் என்று சமீபத்திய குற்றச்சாட்டுகளை கவனத்தில் கொண்டு, பாகிஸ்தானின் புதிய பிரதமர் மிகவும் வலுவான பொருளாதாரத்தின் சவாலை எதிர்கொள்கிறார் என்று அப்சல் மேலும் கூறினார்.

கராச்சி பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதியான டாக்டர் மூனிஸ் அஹ்மர், The Express Tribune நாளிதழில் எழுதிய 'Lessons from Sri Lanka's economic fiasco' என்ற கட்டுரையில், இந்தியாவைத் தவிர, வேறு எந்த தெற்காசிய நாடுகளும் எந்த வடிவத்தையும் வழங்கவில்லை. தெற்காசியாவில் பிராந்திய ஒத்துழைப்பு இல்லாதது குறித்து எச்சரிக்கையை எழுப்பும் இலங்கைக்கான ஆதரவு அல்லது உதவி – என்று அவர் மேலும் கூறினார்.

"தெற்காசிய நாடுகள், குறிப்பாக பாகிஸ்தான், இலங்கை நெருக்கடியை ஒரு பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும். பாக்கிஸ்தானின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, நாட்டின் தலைமை, உயரடுக்கு மற்றும் வெகுஜனங்கள் ஒன்றிணைந்து, நாடு கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் இறங்குவதைத் தடுக்க வேண்டும். மேலும், பிராந்திய நாடுகளுடனான உறவை மேம்படுத்த பாகிஸ்தான் முக்கிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். – என்றார்.

இந்த ஆலோசனைகள் ஒவ்வொன்றும் அந்தந்த நாட்டின் தனிப்பட்ட தேசிய சூழலில் தகுதியைக் கொண்டிருந்தாலும், இலங்கையின் தலைவிதியைத் தவிர்ப்பதற்கு இந்த நாடுகள் அனைத்தும் உண்மையில் செய்ய வேண்டியது, சர்வாதிகாரப் போக்குடன் கூடிய தொலைநோக்கு மற்றும் பொருளாதார உணர்வு ஆகியவற்றுடன் இணைந்த தலைவர்கள் மீண்டும் அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதாகும். சீனா போன்ற எதேச்சதிகார வேட்டையாடுபவர்கள் எல்லா நேரங்களிலும் கைக்கெட்டும் தூரத்தில் வைக்கப் படுகிறார்கள். இது ஆபத்தானது.

# தவறான முறையில் வழிநடத்தப்படும் நாட்டின் அதியுயர் நாடாளுமன்றம்!

## மத்தியவங்கி ஆளுநர் குற்றச்சாட்டு

நாடு எதிர்கொண்டுள்ள மோசமான பொருளாதார சூழ்நிலையில் உண்மையான யதார்த்தத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்பதுடன், நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு அரசியல்வாதிகள் குறுகிய அரசியல் இலாபமின்றி கட்சி பேதங்களை விடுத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்நலால் வீரசிங்க அரசாங்க நிதி பற்றிய குழுவிடம் வலியுறுத்தினார்.

வரவு – செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது மதிப்பீடு செய்யப்படும் அரசாங்கத்தின் வருமானம் உண்மை நிலைக்கு அப்பால் நடைமுறைக்குச்சாத்தியமற்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் நாடாளுமன்றம் தவறான முறையில் வழிநடத்தப்படுகிறது எனவும் ஆளுநர் குழுவின் முன்னிலையில் எடுத்துரைத்தார்.

உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட தொகையை விட மேலதிகமாக 100 கோடி ரூபா வரை கடன் பெறும் தீர்மானத்தை நாடாளுமன்றில் முன்வைக்க அரசாங்க நிதி பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் அதற்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாட மத்திய வங்கியின் ஆளுநர்,திறைசேரியின் செயலாளர் உட்பட மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் முன்னிலையாகினர்.

கடந்த காலங்களில் எரிபொருளுக்கு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதற்கு எதிராகத் தவறான குற்றச்சாட்டுக்களும்,எதிர்ப்புக்களும் முன்வைக்கப்பட்ட காரணத்தால் அதனைச் செயற்படுத்த முடியாமல் போனது, தற்போது மீண்டும் அதே எரிபொருள் விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

உலக வங்கியின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் கொள்கைத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள 60 கோடி அமெரிக்க டொலர்களை எதிர்காலத்தில் எரிபொருள்,எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் மற்றும் சேவை கொள்வனவிற்கு பயன்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லிற்றோ போன்ற நிறுவனங்களுக்கு எங்கிருந்தாவது டொலர்களை பெற்றுக்கொடுத்தாலும் அந்நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ள அதிக நட்டம் காரணாக டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கு போதிய இலங்கை ரூபாக்கள் இன்மை பிறிதொரு பாரிய பிரச்சினையாக உள்ளது. அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடனான முதல் சுற்று தொழில்நுட்ப பிரிவின் பேச்சு இன்று . இப்பேச்சு சாதகமாக அமைந்து,கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளக் கூடிய 3 தொடக்கம் 4 வரையிலான மாத காலப்பகுதி சவால்மிக்கதாக அமையும்.இந்தச் சவாலை எதிர்கொள்ள இயலுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்மை காலத்தில் வரவு – செலவு திட்டத்தைத் தயாரிக்கும் போது மதிப்பீடு செய்யப்படும் அரசாங்கத்தின் வருமானம் உண்மை நிலைக்கு அப்பால் நடைமுறைக்குச் சாத்தியமற்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் நாடாளுமன்றம் தவறான முறையில் வழிநடத்தப்படுகிறது. மதிப்பீடு செய்யப்படும் அரசாங்கத்தின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு அமைச்சுக்கள் உள்ளிட்ட செலவினங்களுக்காக அதிக தொகை ஒதுக்கப்படுவது இறுதியில் ஈடு செய்ய முடியாத அளவிற்கு வரவு – செலவுத் திட்டத்தில் துண்டுவிடும் தொகை ஏற்படுவதுடன், கடன் சுமைக்குள் சிக்குவதும் இதற்கு ஏதுவான காரணம்.

அத்துடன் வருமான வரியை உரிய முறையில் வசூலித்தல், இரத்தினக்கல் கைத்தொழில் உட்பட ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் போது இடம்பெறும் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கு நாட்டில் உரிய பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவது அவசியமாகும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்நலால் வீரசிங்க நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அதற்கான குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்களை குழுவின் முன்னிலையில் தெளிவுபடுத்தினார்.



உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட தொகையை விட மேலதிகமாக 100 கோடி ரூபா வரை கடன் பெறும் தீர்மானத்தை நாடாளுமன்றில் முன்வைக்க அரசாங்க நிதி பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதுடன் நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் மற்றும் அதற்கான செயலாற்றுகைத் திட்டம் தொடர்பில் முழுமையான அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா மத்திய வங்கியின் ஆளுநரிடம் பரிந்துரைத்தார்.கொள்கை ரீதியிலான அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரிய ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த 900 லீற்றர் மண்ணெண்ணெய் முல்லையில் மீட்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் இருந்து பதுக்கி வைக்கப்பட்டிருந்த 900 லீற்றர் மண்ணெண்ணெய் மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் அனைத்து எரிபொருள்களும் தீர்ந்துள்ள நிலையில் ஒரு சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மட்டும் அத்தியாவசிய தேவைக்கான எரிபொருள்கள் மட்டும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லாத நிலையில் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக 15 நாள்களுக்கு மேலாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மண்ணெண்ணெய் வருகை தராத நிலைமை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில் முள்ளியவளை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் பதுக்கி வைத்திருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட விலை கட்டுப்பாட்டு பிரிவினருக்குத் தகவல் கிடைத்த நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் குறித்த இடத்துக்குச் சென்ற விலைக்கட்டுப்பாட்டு பிரிவு முல்லைத்தீவு மாவட்ட இணைப்பதிகாரி கே.ரி.வசந்த சேகரன் தலைமையிலான அணியினர் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 900 லீற்றர் மண்ணெண்ணெய் பதுக்கி வைக்கப்பட்டு இருந்ததை அடையாளம் கண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அந்த 900 லீற்றர் மண்ணெண்ணெயை குறித்த பகுதிக்கு வருகை தந்த மக்களுக்கு குடும்ப பங்கீட்டு அட்டைக்கு ஏற்ற வகையிலே ஒவ்வொருவருக்கும் விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறு எரிபொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டு விற்பனை செய்வதாகவும் சிலர் எரிபொருள்களை இரவு நேரங்களில் பெற்றுக்கொண்டு அதிகூடிய விலையில் விற்பனை செய்கின்றனர் எனவும் மக்கள் தொடர்ச்சியாக குற்றம்சாட்டி வரும் நிலையில் இவ்வாறு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெருந்தொகை மண்ணெண்ணெய் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு குடும்பத்தின் மாதச்செலவு 5 ஆயிரம் ரூபாவினால் உயர்வு!

குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவர திணைக்களம் வெளியிட்டிருக்கும் புதிய தரவுகளுக்கமைய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைய நாட்டின் வருடாந்த பணவீக்கம் கடந்த ஏப்ரல் மாதத்தில் நூற்றுக்கு 33.8வீதமாக பதிவாகி உள்ளது.

உணவுப்பொருள்களின் பணவீக்கம் மார்ச் மாதத்தில் நூற்றுக்கு 29.5 ஆக பதிவாகி இருப்பதுடன் அது ஏப்ரல் மாதத்தில் நூற்றுக்கு 45.1ஆக பதிவாகி இருக்கின்றது.

அதேபோன்று உணவு அல்லாத பொருள்களின் பணவீக்கம் மார்ச் மாதத்தில் நூற்றுக்கு 14.5 ஆக பதிவாகி இருந்ததுடன் அது ஏப்ரல் மாதத்தில் நூற்றுக்கு 23.9ஆக பதிவாகி இருக்கின்றது.

அத்துடன் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவர திணைக்களத்தின் தரவுகளுக்கமைய, மார்ச் மாதத்துக்கு இணையாக ஏப்ரல் மாதத்தில் குடும்பம் ஒன்றின் மாதச் செலவு 5, 672.59 ரூபாவால் அதிகரித்துள்ளது.

# வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்க சர்வதேச நிதியியல் சட்ட மதியுரைஞர் சேவையைப் பெற அரசாங்கம் நடவடிக்கை

*அரசாங்கத்தினால் மீள செலுத்தப்பட வேண்டியுள்ள வெளிநாட்டு கடன்களை மீள்கட்டமைப்பதற்காக சர்வதேசநிதியியல் மதியுரைஞர் சேவை மற்றும் சர்வதேச சட்ட மதியுரைஞர் சேவைக்கான பெறுகைக் கோரலுக்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

*அதற்காக கோரப்பட்ட விலைமனுக்களுக்கமைய, நிதியியல் மதியுரைஞர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக 28 முன்மொழிவுகளும், சட்ட மதியுரைஞர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக 23 முன்மொழிவுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.*

*அதற்கமைய, குறித்த இரண்டு பெறுகைகளுக்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் சர்வதேச நிதியியல் மதியுரைஞர் சேவைக்கான பெறுகை பிரான்ஸ் எம்.எஸ். லஸார்ட் நிறுவனத்துக்கு வழங்கவும் , சர்வதேச சட்ட மதியுரைஞர் சேவைக்கான பெறுகை பிரான்ஸ் எம்.எஸ் கிளி போர்ட் எல்.எல்.பி. நிறுவனத்துக்கு வழங்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.*

# எதனோல் பற்றாக்குறை; மதுபான உற்பத்தி பாதிப்பு

மதுபான உற்பத்திக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட எதனோல் ஸ்பிரிட் இருப்புக்கள் இல்லாதமையால் எதிர்காலத்தில் மதுபான உற்பத்தி பாதிக்கப்படும் என கலால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆண்டுக்கு 3.2 – 3.4 கோடி லீற்றர் ஸ்பிரிட்கள் மதுபானம் தயாரிக்கவும், மேலும் 3 லட்சம் லீற்றர் ஸ்பிரிட் மருந்துத் தின்னர் உள்ளிட்ட மருந்துப் பொருள்களுக்குத் தேவைப்படுவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கரும்பு தட்டுப்பாடு, கோதுமை விளைச்சல் தட்டுப்பாடு, மின்வெட்டு, எரிபொருள் பிரச்சினை, உரத் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த ஆண்டு மதுபான உற்பத்திக்குத் தேவையான எதனோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கலால் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மஹிந்த மாலைதீவுக்கு செல்லவுள்ளாரென வெளியாகிய செய்திகள் முற்றிலும் பொய்!

## நாமல், நஷீட் ஆகியோர் மறுப்பு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவிற்குச் செல்லவிருக்கிறார் எனவும் அங்கு அவருக்காக மாலை தீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாய கருமான மொஹமட் நஷீட் பாதுகாப்பான இடமொன்றை ஏற்பாடு செய்திருக்கிறார் எனவும் வெளியான செய்திகளுக்கு மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் முன்னாள் அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ மற்றும் மொஹமட் நஷீட் ஆகியோர் மறுப்பு வெளியிட்டுள்ளனர்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவிற்குச் செல்லவிருக்கிறார் எனவும், அவருக்கான மாலை தீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாய கருமான மொஹமட் நஷீட் பாதுகாப்பான தங்குமிடமொன்றைத் தயார் செய்து வைத்திருக்கிறார் எனவும் மாலைதீவைத் தளமாகக்கொண்டியங்கும் 'த மோல்டீவ்ஸ் ஜேர்னல்' என்ற செய்தி ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. அது தொடர்பாகத் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தின் ஊடாகக் கருத்து வெளியிட்டுள்ள இருவரும் மேற்கண்டவாறு மறுப்புத்தெரிவித்துள்ளனர்.

அதன்படி முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் கூறியிருப்பதாவது:

நாட்டைவிட்டுச்செல்லும் நோக்கம் எனது தந்தைக்கு இல்லை. எனவே அவர் மாலைதீவிற்குச் செல்லப்போகிறார் எனவும், அங்கு வீடு ஒன்றை வாங்கப்போகிறார் எனவும் வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை மொஹமட் நஷீட் அவரது டுவிட்டர் பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்.

'த மோல்டீவ்ஸ் ஜேர்னல்' என்ற ஊடகத்தில் வெளியான செய்தி முழுவதுமாக சோடிக்கப்பட்ட செய்தியாகும். இத்தகைய பொய்கள் மூலம் அதற்குப் பின்னால் இருப்பவர்கள் தொழில்முறை ஊடகத்துறையை குழிதோண்டிப்புதைக்கின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

## சுற்றுலா அபிவிருந்தி அதிகாரசபை தலைவர் கிமர்லியும் இராஜினாமா!

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரான கிமர்லி பெர்னாண்டோ தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் ஒப்படைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிமர்லி பெர்னாண்டோ இராஜினாமாக் கடிதத்தில் –

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக 30 மாத கால பயணம் முடிவுக்கு வந்துள்ளது. தற்போதைய அமைச்சரிடம் எனது இராஜினாமாக் கோரிக்கையுடன், இலங்கை சுற்றுலாத்துறைக்கு நாளை ஒரு சிறந்த நாளாக அமைய அனைத்து பங்குதாரர்களுக்கும் தொடர்புடைய தரப்பினருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு ஆதரவளித்து, ஆலோசனை வழங்கிய, நலம்பெற வாழ்த்திய உங்கள் அனைவருக்கும், நன்றி. கடந்த 30 மாதங்களாக எமது தாய்நாட்டின் மதிப்பை ஆக்கபூர்வமாக்க முடிந்ததை அறிந்தே நான் இன்று (நேற்று) புறப்படுகிறேன். – என தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 24 மணித்தியால பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் விசேட ரோந்து பணிகள் ஊடாக கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளனஎனபொலிஸ்தலைமையகம்அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில் –

சில பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் திட்டமிட்ட வகையில் பொது மக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாகவும் அநாவசிய குழப்பங்களை ஏற்படுத்த இவர்கள் செயற்படுகின்றனர் எனவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதன்படி, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்கும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு, இந்த இடங்களில் பொதுமக்களுக்கு இடையூறாக நடந்து கொள்ளும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மோதல் நிலைமையை கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் உடனடியாக பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள எரிபொருள் பவுஸர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அநாவசிய குழப்ப நிலைகளால் வீதிகள் மூடப்பட்டு பெரும் பாதிப்புகளை மக்கள் எதிர்கொள்கின்றனர். இவ்வாறு வீதிகள் மூடப்படுவதால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் உட்பட வீதிகளில் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே இவ்வாறான போராட்டங்களைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும் குறிப்பிட்டார்.

# தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் மாணவருக்கு 20 லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள்

## கடந்த ஞாயிறு உதவித் திட்ட நிகழ்வு








தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று வடமாகாணத்திலுள்ள 15 பாடசாலைகளைச் சேர்ந்த – யாழ்ப்பாணத்திலுள்ள 10 பாடசாலைகளையும், வவுனியாவிலுள்ள 4 பாடசாலைகளையும், முல்லைதீவிலுள்ள ஒரு பாடசாலையையும் சேர்ந்த – மொத்தம் 889 மாணவர்களுக்கு இருபது லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள், சீருடைகள்,காலணிகள், புத்தகபைகள் என்பன ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

மாதாந்தம் இடம்பெற்று வந்த இந்த உதவி வழங்கும் நிகழ்வு நாட்டின் நெருக்கடி நிலைமை மற்றும் பாடாசாலைகள் இயங்காமையால் மாணவர்களை ஒன்றிணைத்தலில் சிக்கல் போன்ற காரணங்களால் தாமதிக்கப்பட்டு, பல மாதங்களுக்கான நிகழ்வு ஒன்று சேர்க்கப்பட்டு கடந்த ஞாயிறு நடத்தப்பட்டது.

தாயகம் அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் அதன் நிர்வாகியுமான கலாநிதி வீ.சிறிதரன் தமது துணைவியாருடன் இந்நிகழ்வில் பங்குபற்றிச் சிறப்பித்தார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.

# தேவையேற்படின் இருவாரங்களுக்கு ஒருமுறை எரிபொருள்களின் விலைகளில் திருத்தம் வரலாம்

## என்கிறார் வலுசக்தி அமைச்சர் காஞ்சன



அரசாங்கத்தால் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் அறிவிக்கப்பட்டதைப் போன்று விலை சூத்திரத்திற்கமையவே எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தேவைக்கேற்ப இரு வாரங்களுக்கொருமுறை அல்லது மாதத்திற்கொருமுறை விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் 92 ரக பெற்றோல் லீற்றரொன்றில் ஒரு ரூபா நஷ்டத்தையும், ஓட்டோ டீசலொன்றில் 60 சதம் நஷ்டத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எவ்வாறிருப்பினும் உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடையும் போதும், டொலரின் பெறுமதி குறைவடைந்து ரூபாவின் பெறுமதி அதிகரிக்கும் போது விலை சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் மூலம் கிடைக்கப் பெறும் இலாபத்தின் பயன் மக்களையும் சென்றடையும் வகையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஐ.ஓ.சி. மற்றும் சிபெட்கோ ஆகிய இரு நிறுவனங்களதும் விலைகள் சமாந்தரமாக அமைய வேண்டும் என்பதற்காக விலை சூத்திரமொன்றைப் பேணுவதற்கான அவசியம் தொடர்பில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரே அறிவித்திருந்தோம்.

அதற்கமைய அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட விலை சூத்திரத்துக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த விலை சூத்திரத்துக்கமையவே எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விலை சூத்திரத்தில் 6 செலவீனக்கூறுகள் உள்ளடங்குகின்றன. இவற்றில் இரு செலவீனக்கூறுகளை மாத்திரம் தவிர்த்து எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

விலை அதிகரிப்பிற்கு முன்னர் எரிபொருளுக்கான இறக்குமதி செலவு மற்றும் விநியோகம் வரையிலான செலவுகளை மதிப்பிடும் போது 92 ரக பெற்றோல் லீற்றரொன்றுக்கு 421.21 ரூபாவாகக் காணப்பட்டது.

இதன் போது இதன் விலை 338 ரூபாவாகக் காணப்பட்டது. அதற்கமைய 83.71 ரூபா நஷ்டம் காணப்பட்டது. எனவே தான் 82 ரூபாவால் விலையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் போதும் ஒரு ரூபா நஷ்டத்தை எதிர்கொள்கின்றோம்.

95 ரக பெற்றோலின் விலை 373 ரூபாவாகக் காணப்பட்டது. 95 ரக பெற்றோல் லீற்றரொன்றுக்கான இறக்குமதி மற்றும் விநியோக செலவு 444 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய இதன் விலையை 450 ரூபா வரை அதிகரிப்பதற்காக 77 ரூபாவால் இதன் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று ஓட்டோ டீசல் 289 ரூபாவாகக் காணப்பட்டது. இம்முறை இதன் விலை 111 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இதன் விலை 400 ரூபா வரை உயர்வடைந்துள்ளது. இதற்கான இறக்குமதி மற்றும் விநியோக செலவு 400.60 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய ஓட்டோ டீசலிலும் லீற்றரொன்றுக்கு 60 சதம் நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சுப்பர் டீசலுக்கான இறக்குமதி மற்றும் விநியோக செலவு 444.95 ரூபாவாகும். இதன் விலை 329 ரூபாவாகக் காணப்பட்டது. தற்போது 116 ரூபா என்ற விலை திருத்தத்தின் அடிப்படையில் இதன் விலை 445 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

எதிர்காலத்தில் எரிபொருள் விலை சூத்திரத்துக்கமைய இரு வாரங்களுக்கு ஒரு முறை அல்லது மாதத்துக்கு ஒருமுறை தேவைக்கேற்ப விலைகளில் திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. வலு மற்றும் மின்சக்தி அமைச்சு, நிதி அமைச்சு, மத்திய வங்கி, பெற்றோலிய கூட்டுத்தாபனம், ஐ.ஓ.சி., நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை மற்றும் வலு – மின்சக்தி அமைச்சின் அமைச்சரால் பரிந்துரைக்கப்படும் வேறு தரப்பினரை உள்ளடக்கியதாக அக்குழு அமைய வேண்டும் என்ற யோசனையே முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விலை திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், ஐ.ஓ.சி. நிறுவனம் இலாபமீட்டுவதற்கும் சிபெட்கோ நிறுவனம் நஷ்டமடைவதற்குமான காரணம் என்ன என்று பலராலும் வினவப்படுகிறது.

மண்ணெண்ணெய் விநியோகத்தின் காரணமாகவே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அதிக நஷ்டத்தை எதிர்கொள்கிறது.

அது மாத்திரமின்றி மின்சாரசபை, ரயில் திணைக்களம், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் போக்குவரத்து சபை என்பவற்றுக்கும் சேவையை வழங்குகிறது. எனி னும் ஐ.ஓ.சி. நிறுவனம் இவற்றில் எதிலும் தொடர்பு கொள்ளவில்லை.


இவற்றுக்கான சேவை தொடர்ந்தும் வழங்கப்படுகின்ற போதிலும், கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறுவதில் தாமதம் நிலவுகிறது. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திடமிருந்து மாத்திரம் 30 கோடி டொலர் கிடைக்கப் பெற வேண்டியுள்ளது. இவ்வாறான காரணிகளை அடிப்படையாகக் கொண்டே விருப்பமின்றியேனும் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டியேற்பட்டுள்ளது.

டொலரைப் பெற்றுக் கொள்வதற்காக மத்திய வங்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. ஜூன் மாதத்துக்கு மாத்திரம் எரிபொருள் இறக்குமதி செலவிற்காக 53 கோடி டொலர் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது இலங்கை ரூபாவில் 290 கோடியாகும். வெவ்வேறு காலங்களில் இந்த விலை சூத்திரம் நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாகவே இவ்வாறானதொரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

உலகசந்தையில்எரிபொருள்விலைகுறைவடையும் போதும், டொலரின் பெறுமதி குறைவடைந்து ரூபாவின் பெறுமதி அதிகரிக்கும் போது விலை சூத்திரத்துக்கு அமைய எரிபொருளுக்கு கிடைக்கும் இலாபம் மக்களுக்கு வழங்கப்படும்.

அளவுக்கு அதிகமாக எரிபொருளைப் பெற்று அவற்றை களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டாம் என்று மக்களை கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.




## தமிழக அரசின் நிவாரணப் பொதிகள் மட்டக்களப்புக்கு 50 ஆயிரம் ஒதுக்கம்!

இந்தியாவின் தமிழ்நாட்டு அரசால் வழங்கப்பட்டுள்ள உணவுப் பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு முதற்கட்டமாக 50 ஆயிரம் பொதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

இந்திய நிவாரணப் பொதிகள் தொடர்பாக கருத்து தெரிவத்த மாவட்ட அரசாங்க அதிபர் கணவதிப்பிள்ளை கருணாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவின் தமிழ்நாட்டு அரசால் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணப் பொருள்கள் இலங்கையில் வறுமையில் வாடும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர்களை இணையவழியில் சந்திப்பு நடத்திய உயர் அதிகாரிகள், மாவட்டத்தில் வறுமையில் உள்ள மக்களின் புள்ளி விவரங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டுள்ளதுடன், மாவட்டத்துக்கான உலர் உணவு பொதிகளின் எண்ணிக்கையைக் கேட்டறிந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக 84 ஆயிரம் குடும்பங்களுக்கு இதில் முதற்கட்டமாக தலா 10 கிலோ நிறை கொண்ட 50 ஆயிரம் நிவாரண பொதிகள் கிடைக்கவுள்ளதுடன் அதனை வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு தலா ஒரு பொதி வழங்கவுள்ளதுடன் அதன் பின்னர் வரும் நிவாரணப் பொதிகள் ஏனையவர்களுக்கு வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மோசடிகளுக்கு கைகொடுப்பது எனது அரசியல் சிந்தனையல்ல!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா திட்டவட்டம்



ஊழல் மோசடிகளுக்கு கைக்கொடுப்பது, அரசியல்வாதிகளின் உறவினர்களுக்கு உதவுதல் போன்ற விடயங்களை மேற்கொள்வது எனது அரசியல் சிந்தனை அல்ல என துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தனது 50 வருட கால அரசியல் வாழ்க்கையில் உறவினர்களுக்கு அரசியல் ரீதியாக கைகொடுத்ததில்லை என்றும் எந்தவொரு கூட்டுறவு திணைக்களத்திலும் தலைவர்மாரை நியமித்ததில்லை என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்லா மற்றும் அமைச்சின் அதிகாரிகளுக்கும் இலங்கை துறைமுக அதிகார சபையில் காணப்படும் ஒவ்வொரு கட்சிகளையும் பிரதிநித்துவப்படுத்தும் தொழிற்சங்கத் தலைவர்கள், துறைமுக சபை அதிகாரிகள் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் அமைச்சில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

நாடு பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்துவரும் இந்த சூழ்நிலையில், உண்மையான மக்கள் தலைவனாக மக்கள் படும் துன்பங்களைக் கண்டும் காணாமல் இருப்பதற்கு என்னால் இருக்க முடியாது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இந்நிலைமை இன்று நேற்று காணப்பட்ட பிரச்சினை அல்ல. இந்நிலைமைக்கு கடந்த காலங்களில் ஆட்சி செய்த ஒவ்வொரு அரசாங்கங்களினதும் கொள்கைகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தியிருந்த விதங்களும் முக்கிய காரணியாகும்.

எவ்வாறாயினும் கடந்த காலத்தைப் பேசிப் பயனில்லை என்றாலும், எந்தவிதத்திலாவது செயற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதே தற்போதைய தேவையாகும்.

நாட்டை நேசிக்கும் தொழிலாளர் படையால் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முடியும். அவர்கள் நாட்டுக்காக திறமையாகவும், வினைத் திறனுடனும் வேலை செய்வது கட்டாய தேவையாகும்.

அத்துடன், அவர்களது தேவைகள் அறிந்து, அவர்களின் குறைகளை கண்டறிந்து, அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டியது எமது பொறுப்பாகும். அவர்களுடன் ஒன்றித்து வேலை செய்வதை நான் எதிர்பார்த்துள்ளேன்.

நாட்டில் உள்ள சகல அரச நிறுவனங்களிலும் வீண் விரயம் ஏற்படுத்தப்படுவதாகவும், இலஞ்சம், ஊழல் மோசடிகள் நடைபெறு கின்றன என விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. இவ்வாறான மோசடி வேலைகள் நடைபெறும் சந்தர்ப்பங்களைத் தனிப்பட்ட ரீதியில் எனக்கு அறியத்தருமாறு நான் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது வேலைத்திட்டங்களைத் திறம்பட முன்னேற்றிச் செல்வதற்கு சகல தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -21

**நெதர்லாந்துக் கூட்டம் தீர்வுக்கான அணுகுமுறையா?**

நாட்டின் வங்குரோத்து நிலைமை, பட்டினி, அதன் எதிர்கால நெருக்கடி என்பவற்றின் அடிப்படையில் பெரும்பான்மை இன மக்களுக்கு வந்த கலக்கங்களின் பின்னணியில்தான் காலிமுகத்திடல் போராட்டம் ஆரம்பித்தது. அதில் இன இணக்கப்பாடுகளை ஒட்டிய புரிந்துணர்வு களும் தென்பட்டன. இவற்றினால் பேரினவாதம் தனது போக்கிலிருந்து சிறிது பின் வாங்கியதே ஒழிய, அதிகாரத்தில் உள்ள பேரினவாத இனம் அந்தப் பேரினவாதக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதில் மனமாற்றம் எதுவும் கொள்ளவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ் மட்டும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் நடத்துவேன் எனத் தெரிவித்தார்

பதவிக்குவந்தரணில்காலிமுகத்திடல் ஏற்படுத்திய புரிந்துணர்வுகளின் பின்னணியிலும் கூட தான் அதை நடைமுறைபடுத்துவார் என்று ஜாடை கூடக் காட்டவில்லை

சிங்கள, பௌத்த ஏகாதிபத்தியத்தை நிறுத்துவேன் என்று உத்தரவாதம் அளித்த ஜனாதிபதி இன்றும் தனது நிறைவேற்று அதிகாரங்களோடும், தேவையான எண்ணிக்கையான நாடாளுமன்ற அங்கத்தவர்களின் பலத்தோடும் பதவியில் இருக்கிறார்.

அவருக்கு ஏதுவாக ரணில் பிரதமர் பதவியேற்று, நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பது தான் தனது பணி என்று பிரயாசையுடன் நடக்கிறார்.

ஆக, இங்கு பயணிக்கும் அரசுப் பேருந்தில் கொள்கைளிலோ பயணப் பாதைகளிலோ மாற்றங்கள் இல்லை. அது ‘தங்களது நாடு’ என்பதில் யாழ்ப்பாணம் நோக்கிப் போகிறது. பட்டினிக்குப் பிச்சை கேட்கிறது – சமாளிக்க. ஆனாலும், பட்டினி நிலைமை நேர்ந்தமைக்குப் பிரதான காரணமாக இருக்கும் இன ஒதுக்கல்முறையைஅது ஒப்புக்கொண்டு தன்னைத் திருத்தத் தயாரில்லை.

வடபகுதி ஆளுநர் வெசாக் தினத்தன்று ஆரியகுளத்தில் பந்தல் போட்டு, ஞானத்தின் வெளிச்சம் வருவதற்கு யாழ் மாநகர சபை உடந்தையாக நடக்கவில்லைஎன்று அந்த மாநகர சபையைக் கலைப்பதற்கு வழிவகைகளை ஆராய முற்பட்டுள்ளார்.

கனடா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை நினைவு தினம் பற்றிய தீர்மானம் பிழையானது, ஆதாரமற்றது என சர்வதேசரீதியில் விளக்கங்கள் கொடுக்க வழிவகை செய்யப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி எல் பீரிஸ் தெரிவிக்கிறார்.

புரிந்துணர்வுகளின் முளைகள் தோன்றினாலும், அவை முளைத்து வேர் வைக்கும் முன்னரே, இவை தம் பாட்டுக்கு அதிகாரங்களைச் செயற்படுத்துகின்றமையால் இணக்கம் உருவாக எப்படி வழி ஏற்படும்?

சுமந்திரன் பங்கு பற்றியது, சில சர்வதேச நாடுகள் ஒருங்கிணைந்து, ஸ்ரீலங்காவில் எழுந்துள்ள தற்போதைய நிலையை ஆராய்ந்து பரிகார வழிகள் தேடுவதற்கான முயற்சி அல்ல. சர்வதேச நாடுகளின் தனிமனிதர்களை இணைத்து செயற்படும் அரசசார்பற்ற நிறுவனமே Dialogue Advisory Group (பேச்சுவார்த்தைக்கான புத்திமதிகள் தரும் குழு என தமிழில் பொருள் கொள்ளலாம்). சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமை மன்றம், செஞ்சிலுவைச் சங்கம் போன்றதுதான் இதுவும். குழப்பங்கள் நிறைந்த நாடுகளில் அவற்றுக்குக் காரணமான மனித உரிமை மீறல்கள்,



செயல்படுத்தப்படும் அரசியல் கொள்கைகளின் பாதிப்புகளை ஒட்டி அறிவுரைகள் தந்து, அவற்றின் விவரங்கள் பற்றி சர்வதேச நாடுகளுக்கும் அறிவுறுத்துவது இத்தகைய அமைப்புகளின் பணி. இப்படியான நிறுவனங்களுக்கு அரசு அதிகாரம் எதுவும் இல்லை. காலங்காலமாக அறிவுறுத்தல்கள் தருவது வழமை. நெதர்லாந்தில் நிறுவப்பட்டு, அங்கிருந்து சில சர்வதேசப் பிரமுகர்களுடன் இயங்கும் இந்த குழுவில் அரசியல் கொள்கைச் செயற்பாடுகளை (Political Deals) செய்து கொள்வதற்கு அவற்றில் சம்பந்தப்பட்டிருக்கும் அரசியல் தரப்புகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் ஈடுபாடு கொண்டு வருவது இவர்களின் செயல்திட்டம். ஒரு பிரச்சினையை முன்னெடுத்து, அவற்றை ஆராய்ந்து, புத்திமதிகள் தந்து, இணக்கப்பாடுகளுக்குக் கொண்டு வருவது அவர்களது கொள்கை.

நோர்வேயின் சமாதான பேச்சுவார்த்தை உருவாவதற்கும் இப்படி நல்லெண்ணம் கொண்டநோர்வீஜிய அமைப்புகளின் முன்னெடுப்புதான் காரணமாக இருந்தது.

அதேபோல முன்னைய ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரைத் தலைவராகக் கொண்டு முள்ளிவாய்க்கால் போர்க் காலங்களில் இயங்கிய சர்வதேச நெருக்கடி குழு (International crisis Group) கூட இதே பணியைத்தான் செய்தது.

எவ்வளவுதான் கருத்தாழம் கொண்டு பணியாற்றினாலும், பக்கச்சார்பில்லாமல் கத்தியில் நடப்பது போல் நடந்து காரியமாற்ற விழைந்தாலும், அவர்கள் இறைமைகள் உள்ள நாட்டிற்குள், அந்த நாடுகளின் அனுமதியின்றி எதுவும் செய்வது முடியாது. சர்வதேசக் கருத்தாக்கங்களை உருவாக்கலாம். அவ்வளவுதான். பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தரப்புகளின் இணக்கப்பாடு முக்கியம்.

Dialogue Advisory Group என்ற இந்த நிறுவனத்தை ஸ்ரீலங்காவைச் சேர்ந்த ராம் மாணிக்கலிங்கம் என்பவர் புளுவர் ராவன்ஸ்பேர்கன் என்பவருடன் இணைந்து சர்வதேசத்தில் குறிப்பிட்ட பதவிகளில் முன்னர் இருந்த சிலரின் அனுசரணையுடன் நடத்துகிறார். இந்த நிறுவனத்தின் இணையாளர்கள் அவர்களாலோ அல்லது இந்த நிறுவனங்களின் மூலமாகவோ முன்னர் ஈராக், ஸ்பானிய, பாஸ்க் விவகாரங்கள், அயர்லாந்து போன்ற நாடுகளின் பிரச்சினைகளில் புத்திமதிகள் தந்தவர்கள். ராம் மாணிக்கலிங்கம் சந்திரிகாவின் அரசு காலத்தில் உருவாக்கப்பட்ட தேசிய ஒற்றுமைக்கும் இணக்கத்துக்குமான அலுவலகத்தில் (President's Office of National Unity and Reconciliation) பணியாற்றியவர். அந்த நாள்களில் ரணிலோடும் விடுதலைப் புலிகளோடும் அவர்களின் நெருக்கத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தியவர். ஈஸ்டர் குண்டு வெடிப்பு பின் ஸ்ரீலங்காவின் தேசியப் பாதுகாப்புச் சபைக்கு புத்திமதிகள் தந்தவர். இவற்றின் பின்னணியில் ராம் மாணிக்கலிங்கத்தின் குழுவை நோர்வே போன்று இணைக்கப் பேச்சுவார்த்தைகளுக்கு ரணில் நாடி, சுமந்திரன் அவர்களுடன் பேசப் போயிருக்கலாம்.

நாட்டின் தற்போதைய வன்முறைகளில் ஒரு வெளிப்படையான உண்மை உண்டு. முள்ளிவாய்க்கால் யுத்தம் நாட்டின் இறைமையை உறுதிப்படுத்த, பயங்கரவாதத்தை ஒடுக்க நடத்தப்பட்ட யுத்தம் என்ற வாதங்கள் இருந்தாலும், இந்த வன்முறையில் ஜனாதிபதிக்கும் அவரது சகாக்களுக்கும் உள்ள தொடர்புகளுக்கு நேரடியான சாட்சியங்கள் உண்டு. அது, பொது மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதம். ஏற்கனவே இத்தகைய குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் ஐ.நாவின் சர்வதேச மனித உரிமைகள் மன்று, சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அலுவலர்கள் சுமந்திரன் நேரடியாகத் தரக்கூடிய தகவல்களுக்காக இந்தக் குழுவின் அழைப்பில் பங்கு பற்றி தகவல்களைத்தங்களது ஆய்வுகளுக்காகப் பெற்றிருக்கலாம். சுமந்திரனுக்குப் பல மனித உரிமைகள் வழக்குகளில் அனுபவம் உண்டு என்பதால் இந்தக் குழுவே அவரை அழைத்து இருக்கலாம். மஹிந்தவும் சகாக்களும் கைது செய்யப்பட வேண்டும் என்பதை முதலில் பகிரங்கமாக வெளிப்படுத்தியவர் சுமந்திரனே.

சில சமயங்களில் சில இணக்கப்பாடுகளுக்குத் தமிழ்த் தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதின் முன்னோடியாக



ரணில் இந்த நகர்வை ராம் மாணிக்கலிங்கத்தின் மூலமாக முன்னெடுத்தும் இருக்கலாம். நோர்வே காலத்தில் விடுதலைப் புலிகளுடன் பேசிக்கொண்டு, இணக்கங்கள் காட்டி, சர்வதேச நாடுகளின்நிதிஉதவியில்குறியாய் இருந்தமை போல, இப்பொழுதும் அவருக்கு நாட்டில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தத் தமிழ்த் தரப்புகளுடன் பேசிக்கொண்டு இருக்கிறேன் என்ற பிம்பம் ஒன்று தேவையாக உள்ளது. அவரின் காலத் தேவைகளுக்கு இது அவசியமாகிறது. முதலில் தமிழ்த் தரப்புகள் இடையே தீர்வு பற்றிய ஒற்றுமை – இணக்கம் – வரவேண்டும், அவர்கள் இந்தப் பேச்சுக் காலங்களில் முட்டி மோதித் தீர்க்க எடுக்கும் காலம் தனக்கு போதும் என ரணில் கணித்திருப்பார்.

இப்படியே பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்துவதில் இந்தியாவையும் – நோர்வே காலம் போல – சர்வதேச பேச்சுவார்த்தையின் ஊடாகத் தீர்வு தருவேன் என்று ஓரங்கட்டத் திட்டமிட்டு இருப்பார் ரணில். இது அணுகுமுறையோ, கருத்தாக்கமும் எதுவானாலும் காலம் கடத்தும் நோக்கம் பின்னணியில் உண்டு.

ரணிலுக்கோ அரசுக்கோ தமிழ் மக்களின் கோரிக்கைகள் எவையென்பது தெரியாதவை அல்ல. நடைமுறைப்படுத்தும் எண்ணங்கள்தான் இல்லை.

இவற்றைத் தமிழ் மக்கள் சமயோசிதமாகப் புரிந்து, தங்களது அணுகு முறைகளை மேற்கொள்ள வேண்டும். இவை தனிமனிதனின் தற்பெருமையையோ, அகங்காரத்தையோ, அவர்களின் திறமைகளின் நெளிவு சுளிவுகளையோ ஓட்டியவை அல்ல. ஓர் இனத்துக்காக எடுக்கப்படும் படிகள் என்ற கவனம் வேண்டும். அப்படியான படிகளில் ஏறிக்கொண்டு, அனுபவங்களில் அது எங்கே கொண்டு போய் விடும் என்ற தீர்க்கதரிசனத்துடன் செயற்பட வேண்டும்.

(வளரும்)



ராம் மாணிக்கலிங்கம்

காலைக்கதிர்
Kalaikkathir

## எரிவாயு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விலை 5,000 ரூபாவை விட அதிகரிக்கலாம் என அந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், டொலரின் விலை அதிகரிப்பு, உலக சந்தையில் சமையல் எரிவாயு விலையின் அதிகரிப்பு என்பவற்றால் தற்போதைய விலையில், எரிவாயுவை விற்பனை செய்ய முடியாது என்றும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் நிர்ணய விலை 4,860 ரூபா என்ற போதிலும் விற்பனை முகவர்கள் 5,000 ரூபாய்க்கே அதனை விற்பனை செய்கின்றனர் என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

## கோட்டாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டிடம் சமர்ப்பித்துள்ளார்.

இந்த அறிக்கை நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் ஜனாதிபதிக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது விசாரணை அறிக்கை இதுவாகும்.

18 முன்னாள் இராணுவ அதிகாரிகளை அரச நிர்வாகத்திற்கு நியமித்ததன் மூலம் அரச சேவையை இராணுவமயமாக்கினார் எனவும் யஸ்மின் சூகா ஜனாதிபதி மீது குற்றம் சுமத்தியுள்ளார் என அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## அரசிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரவு கொழும்பில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசியல் சவால்களை வெற்றிக் கொள்வதற்காக 10 பிரதான கட்சிகளை ஒன்றிணைத்து முற்போக்கான கூட்டணி ஒன்றை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் கூட்டணியாகப் போட்டியிடவும் தீர்மானித்துள்ளோம்.

முழு நாடும் பாரிய பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. தற்போதைய இக்கட்டான பின்னணியில் அரசாங்கம் என்றதொன்று இருப்பது அவசியமானதாகும்.

நாட்டு மக்கள் பயன்பெறும் வகையிலான தீர்மானங்களை அரசாங்கம் முன்னெடுக்குமாயின் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார்.

நிபந்தனையற்ற ஆதரவு வழங்குகிறோம் என்ற காரணத்திற்காக அரசாங்கம் தன்னிச்சையான முறையில் முறையற்ற வகையில் செயற்பட முடியாது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள்.

அரசியல் நெருக்கடியையும், பொருளாதார நெருக்கடியையும் தீவிரப்படுத்திய முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தற்போதும் திரைமறையில் இருந்துக்கொண்டு செயற்படுகிறார்.

பொதுஜன பெரமுனவின் ஒருசில உறுப்பினர்களை தன்வசம் வைத்துக் கொண்டு தனக்கு சாதகமான விடயங்களை செயற்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் முக்கிய பல விடயங்கள் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தில் உள்வாங்கப்பட வேண்டும். இரட்டை குடியுரிமையுடைய நபர் அரச செயலொழுங்கில் எவ்விதத்திலும் தலையிடாத வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். –என்றார் அவர்.

## கைதான இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி மற்றும் காலி முகத்திடலில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 17 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## ஒரு லட்சத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விட மேலதிகமான தொகையைச் சேர்த்து தலா 5,000 ரூபாய் வழங்குவதற்கு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் 78 ஆயிரத்து 442 சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கும் 27 ஆயிரத்து 978 வறிய குடும்பங்களுமென மொத்தமாக ஒரு லட்சத்து ஆறாயிரத்து 420 குடும்பங்கள் நன்மையைப் பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை சமுர்த்தி திணைக்களம் துரிதமாக மேற்கொண்டு வருகின்ற நிலையில் அந்த நிதி கிடைத்தவுடன் மே மற்றும் ஜூன் மாதங்களில் அந்தக் கொடுப்பனவு கிடைக்கும். – என்றார்.

## மண்ணெண்ணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

மண்ணெண்ணெய் பல நாள்களாக வடக்கிற்கு வரவில்லை. தென்னிலங்கையில் சகல இடங்களுக்கும் எரிபொருள் போய்க்கொண்டிருக்கின்றது.

வடபகுதிக்கு மாத்திரமே மண்ணெண்ணெயும் எரிபொருளும் தடைபட்டுள்ளன. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. தமிழ் அரசியல்வாதிகளும் கண்ணை மூடிக் கொண்டு இருக்கின்றார்கள். இதனை நாம் பலதடவை சுட்டிக்காட்டியுள்ளோம். இதனால் கடற்றொழிலாளர் சங்கங்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்த போவதாக கொந்தளித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

நாளைக்கு (இன்று) மண்ணெண்ணெய் வரவில்லை என்றால் நீங்கள் என்னவென்றாலும் செய்யுங்கள் என்று நாங்கள் கூறியுள்ளோம்.

தமிழ் அரசியல்வாதிகளின் அலுவலகங்களையோ, மாவட்ட செயலகத்தையோ, ஆளுநர் அலுவலகத்தையோ அவர்கள் முற்றுகையிடத் தயாராகவுள்ளனர்.

நாங்கள் இதனை பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. கடற்றொழில் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டு உள்ளன. தயவு செய்து இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனத்திலெடுத்து நாளைக்கு (இன்று) கரையோரப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணெயை பெற வசதி ஏற்படுத்த வேண்டும். அது வரத் தவறினால் சங்கங்கள் போராட்டத்தை ஆரம்பிக்கும். ஆரம்பித்தால் அதனை அடக்க முடியாது. தயவு செய்து இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு கரையோரப் பிரதேசங்களுக்கு கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்றார்.

# ஒரு லட்சம் கோடி ரூபா பணத்தை அச்சிட வேண்டிய நிலை வருமாம்!

இலங்கையில் மேலும் ஒரு ட்ரில்லியன் (ஒரு லட்சம் கோடி) ரூபா பணத்தை அச்சடிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மேலும், எதிர்வரும் நாள்களில் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடையும் எனவும், இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

எதிர்வரும் நாள்களில் வரவிருக்கும் கடினமான நாள்களை பார்க்கும் போது மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவார்கள். மக்கள் துன்பப்படும் போது, ஆர்ப்பாட்டம் நடத்துவது இயற்கையானது. கட்டாயம் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும். எனினும் அது அரசியல் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை பாதிக்காமல் இருப்பதை உறுதி செய்ய விரும்புகின்றோம்.

இந்த நிலைமைகள் கடினமாகும் என்பதை நாம் அறிவோம். ஆகவே இரண்டு ஆண்டு நிவாரண திட்டத்தை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.

அனைத்து அபிவிருத்தி பணிகளையும் இடைநிறுத்தும் வகையிலான இடைக்கால வரவு – செலவுத் திட்டம் தேவை. இதன்மூலம் நிதியை நிவாரண திட்டத்திற்கு ஒதுக்க முடியும். உதாரணமாக சுகாதார அமைச்சுக்கான நிதியை குறைக்க முடியாது. கல்வி அமைச்சுக்கான நிதியையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே குறைக்க முடியும். – என்றார்.

# பல்வேறு விபத்துகளில் ஐவர் சாவு




சிறிய ரக லொறி ஒன்றும் தனியார் பஸ் மற்றும் ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு – பதுளை பிரதான வீதியில் பெல்மடுல்ல பாதகட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரி நோக்கி பயணித்த சிறிய ரக லொறி அதே திசையில் பயணித்த ஓட்டோவை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிரே வந்த தனியார் பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

இதனையடுத்து லொறி, ஓட்டோவுடன் மோதியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் நிக்கவெரட்டிய மீவெல்லேவ பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

லொறியின் சாரதியின் கவனக்குறைவு காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஓட்டோவில் பயணித்த பெண் ஒருவரும் குழந்தையும் பலத்த காயங்களுடன் பெல்மடுல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எம்பிலிபிட்டிய – மெரகெட்டிய வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 25 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய நோக்கி பயணித்த கார் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கொட்டவெஹெர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலுகொல்ல மஹா உஸ்வெவ வீதியில் பலுகொல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 08 வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் சாரதி உஸ்வெவ நோக்கி பயணித்த போது, அதே திசையில் பயணித்த டிராக்டரை முந்திச் செல்ல முற்பட்ட போது உழவு இயந்திரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இதேவேளை, கெக்கிரிவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலாவ கெக்கிராவ பிரதேசத்தில் காரொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 52 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாரவில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொழும்பு – புத்தளம் வீதியில் தெமட்டபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 25 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## மஹிந்த கடவுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனை தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ உட்படப் பலர் தங்கள் கடவுச்சீட்டுகளை இன்னமும் ஒப்படைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தனது வீடு தாக்கப்பட்டவேளை தனது கடவுச்சீட்டு அழிக்கப்பட்டுவிட்டது என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார் என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் முன்னாள் அமைச்சர்கள் பவித்திரா வன்னியாராய்ச்சி, நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்த்தன, சி.பி.ரட்னாயக்கா உட்பட 17 பேருக்குப் பயணத் தடை விதித்து அவர்களின் கடவுச்சீட்டுகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## தீவக மீனவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மிக விரைவில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு தீவக மீனவர்களுக்கு மட்டும் வழங்கப்படவுள்ளது. நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, அனலைதீவு உள்ளிட்ட தீவு பகுதி மீனவர்கள் 705 பேருக்கு இது பகிரப்படும்.

அந்த பணியை மீன்பிடி திணைக்களம், பிரதேச செயலகம் மற்றும் மீன்பிடி சங்கங்கள் மேற்கொள்ளவுள்ளன என மாவட்ட செயலர் மேலும் கூறினார்.